தென்னாடு

Thennadu
Saiva Tamil Monthly Magazine
VOL - 07 ISSUE – 03 Release - 75
25th October 2026 - Full Moon

தென்னாடு
சைவத் தமிழ் திங்கள் இதழ்
தொகுதி 07 எண் 03 இதழ் 75
2026 ஐப்பசி 8 ஆம் நாள் - நிறைமதி

சம்புநாதர் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா - ஐப்பசி 06 (23-10-2026)

தென்னாடுடைய
சிவனே
போற்றி,
எந்நாட்டவர்க்கும்
இறைவா
போற்றி

தென்னாடு

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300 ஐப்பசி
நிறைமதி வெளியீடு - தொகுதி 07 எண் 03 இதழ் 75

அழிந்த சிந்தை
அந்தணாளர்க்கு
அறம் பொருள்
இன்பம் வீடு
மொழிந்த வாயான்
முக்கணாதி மேயது
முதுகுன்றே

பொருளடக்கம்

02	- முதல்வர் உரை
03	- நிறைமதி அறிக்கை
04, 05, 06	- ஆவணப்படுத்தல் செய்திகள்
07	- ஆசிரியர் தலைப்பு
08,09,10,11	- குருமகாசந்நிதானங்கள் வருகை
12, 13	- சிவபுராண விளக்கவுரை
14, 15	- அடியார் பெருமை
16, 17, 18	- சிவபூமியில் சிவனைத்தேடி
19	- மரு. பிரதாபனின் கேள்வியும் பதிலும்
20, 21	- ஈழத்துச் சித்தர்கள்
22, 23	- பெரியபுராணம் தொடர்கதை
24, 25	- சி.கே.சு ஐயாவின் பெரியபுராண உரை
26	- ஆசிரியர் தலைப்பு (ஆங்கிலம்)
27, 28	- பெரியபுராணம் தொடர்கதை (ஆங்கிலம்)

அட்டைப் படக்குறிப்பு

அருள்மிகு மனோன்மணி அம்மன் உடனுறை ஐம்பூதநாதர்

தென்னாடு இதழுக்கான கொடையாளர்கள்

(அ) சிவத்திரு. சோமசுந்தரம் பிரகதீஸ்வரன்
(ஆ) சிவத்திரு. தெய்வநாயகம் சௌந்தரராசா
(இ) சிவத்திரு. தெய்வேந்திரம்பிள்ளை சிதம்பரகுமார்
(ஈ) சிவத்திரு. கனகரத்தினம் சுதர்மன்
(உ) சிவத்திரு. சிவப்பிரகாசம் விஜயநேசன்
(ஊ) சிவத்திரு. கிருஷ்ணமூர்த்தி கிரிதரன்

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் எழுபத்து ஐந்தாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் "மதி நிறங்கள்" (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300 துலை நல்லோரை ஐப்பசித் திங்கள் 08 ஆம் நாள் நிறைமதி அன்று (25-10-2026 ஞாயிற்றுக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம்.

தென்னாடு குருமரபு வாழ்த்து

ஐம்பூத நாதரின் திருவரு ளாலும்
ஆலமர் செல்வரின் குருவரு ளாலும்
பைந்தமிழ்ச் சார்ந்துநற் சிவநெறி சிறக்கப்
பாரினில் நன்மைகள் ஓங்கத்தென் னாடு
செந்தமிழ் ஆகமச் சிவமடம் உதயம்
சீர்திகழ் மடம்இதன் செய்பணி நாளும்
எங்கணும் பொலிந்தருள் விளங்கிட வேண்டி
எழிற்குரு மரபது தழைகவே மாதோ.

இயற்றியவர் : சிவத்திரு சு.குஞ்சிதபாதம்
திருவாவடுதுறை ஆதீனப் புலவர்.
05-07-2026.

தென்னாடு சிவமடத்தின் நோக்கங்கள் - சுருக்கம்

- சைவ சித்தாந்த வழியில், திருமுறை நெறியில் வழிபாடுகள் மற்றும் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- சைவ சமயத்தின் மரபினைப் பேணிப் பாதுகாத்தல், மேன்மையுறச் செய்தல் மற்றும் ஊடுகடத்துதல்.
- பத்தி மொழியான தமிழின் மொழி, பண்பாட்டு, மரபினைப் பேணிப் பாதுகாத்தல், மேன்மையுறச் செய்தல் மற்றும் ஊடுகடத்துதல்.

தொடர்பு கொள்ள:
தென்னாடு சிவமடம்
தென்னாடு வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்,
இலங்கை.

Contact Thennadu
Thennadu Sivamadam
Thennadu Road,
Kokuvil East,
Kokuvil, Sri Lanka.

+94 70 770 1111 | +94 21 222 9722 | +61 499 493 300
www.thennadu.org | thennavan@thennadu.org

தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org

சமயப் பிணக்குகளும் வழக்குகளும்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

கோயில்கள் மற்றும் சமய அமைப்புகளுக்குள் பிணக்குகளும் பின்னர் அவை வழக்குகளாக மாறும் நிலைமைகள் தற்போது அதிகரித்துக்கொண்டு வருகின்றன. அதிகார ஆணவம், ஆன்மிக ஆணவம் கொண்டு திருவருளே எல்லாவற்றிற்கும் மேல் என்ற எண்ணத்தை விட்டு நடப்பது, கோயில் மற்றும் சமய நிறுவனங்களில் பணம் மற்றும் பொருட்களை கையாளுவது, கோயில் நிலங்கள் சொத்துக்கள் தொடர்பான பிணக்குகள், நிர்வாகக் குழுக்களுக்கான போட்டியும் அதன் பக்கவிளைவுகளும், சில பூசகர்கள் கோயிலுக்கு உரிமை கொண்டாடுதல், திருவிழாக்களுக்கான உரிமைப் போட்டிகள், பரம்பரை கட்டளைகளை மீறி நிர்வாகக்குழு தன்னிச்சையாக நடத்தல், கோயிலோ சமய நிறுவனங்களோ அவற்றின் நோக்கங்களை மீறி நடத்தல், இறை நம்பிக்கை அற்றவர்கள், பண்பாடு பற்றி சிந்திக்காதவர்கள் தலைமைப் பதவியை வகித்தல் போன்ற காரணிகள் இவ்வாறான பிணக்குகள், வழக்குகளுக்கு அடிப்படையாகின்றன.

பிணைகினை அல்லது வழக்கினை முன்னெடுக்கும் ஒருவர் அல்லது ஒரு நிர்வாகக்குழு உறுப்பினர்கள் முதலாவதாக தாங்கள், தங்கள் மனச்சாட்சி வழி இதனை சோதித்து பார்க்கவேண்டும். கோயில்கள் மற்றவர்களுக்கு பத்தி வழிகாட்டும் ஒரு ஆன்மீக மையம். அங்கே இறைவன் உறைகின்றான் என்பது தான் மிகவும் அடிப்படையான எடுகோள். ஆகவே தாங்கள் செய்யும் செல்யல்கள் அறவழி நிற்கின்றனவா என்று ஒருமுறை சோதித்து பார்க்கவேண்டும். இல்லையெனில் சுமுகமாகப் பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ளவேண்டும். அறவழி இல்லை என்று தெரிந்தும் பிணக்குகளை, வழக்குகளாக்குகின்ற ஒருவர் அல்லது ஒரு நிர்வாகக்குழு உறுப்பினர்கள் நிச்சயமாக கோயிலினுள் கடவுள் இல்லை என்பதன் அடிப்படையிலே தான் முன்னெடுக்கின்றனர்.தூணிலும் துரும்பிலும் இருக்கும் இறைவன் நிச்சயமாக கோயிலினுள் குடிகொள்கிறான். இவர்கள் செய்யும் இந்த தீவினையான செயல்களுக்கு ஏற்ப நிச்சயம் வினைகள் ஊட்டப்படும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

அதுபோல நியாயமற்றது, அறமற்றது என்று தெரிந்தும் வழக்குகளை எடுத்து நடத்துபவர்களும் நிச்சயமாக வினை மூட்டையை, தெரிந்தோ தெரியாமலோ சுமக்கின்றனர். சைவ சித்தாந்த அடிப்படையில் வினைகளுக்கு ஏற்பவே வாழ்க்கை என்பது முடிந்த முடிவு. இறைவன் விருப்பு வெறுப்பு அற்றவன் ஆனாலும் அவரவர் தாங்கள் சேகரித்த வினைகளை அவர்களுக்கு ஊட்டுபவன் அவனே.

ஆகவே பொது சேவை, இறை சேவை செய்ய வந்தவர்கள் குளிக்கவந்து சேறுபூசிய கதையாய் இல்லாமல், இயன்றளவு அறவழியில், ஆன்மீக வழியில் கோயிலுக்கும், சார்ந்த அமைப்புகளுக்கும் நன்மையை செய்துவிட்டுச் செல்வதே அரும்செயல். மறுபிறப்பை விளக்கும் எங்கள் சமயம், வினைகள் கடத்தப்படும் என்றும் போதிக்கிறது. ஆகவே வினையை நாங்கள் அழியாமல் அறவழியில் செயல்களை செய்து, உணர்வுடன், இறை நம்பிக்கையுடன் திருக்கோயில்களை மேன்மைப்படுத்துவோம்.

**உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்
- திருவாசகம்**

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. தென்னாடு நிலவன்
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org

தென்னாடு நிறைமதி அறிக்கை

(25-09-2026) – வவுனியா கோயில்குளத்தில் பூப்புனித நீராட்டு விழா செந்தமிழில் ஆற்றி வைக்கப்பட்டது. (26-09-2026) – தென்னாட்டின் எழுபத்து நான்காவது திங்கள் இதழ் வெளியீடு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300 கன்னி நல்லோரை புரட்டாசித் திங்கள் 09 ஆம் நாள் நிறைமதி நன்னாளில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குண ராசா ஐயா அவர்கள், யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி லதானந்தினி சிவபாதம் அவர்கள், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் சிவத்திரு. யோகராசா தயாளன் அவர்கள், மல்லாகம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி இளநிலை (கனிஷ்ட) வித்தியாலய அதிபர் சிவத்திரு. இராசையா நந்தகுமாரன் அவர்கள், யாழ்ப்பாண முன்னணி வணிக நிலையங்களில் ஒன்றான மங்களா காட்சியக முதல்வர் சிவத்திரு. குமாரசாமி ஜெயந்தன் அவர்கள், கடந்த புலமைப்பரிசில் தேர்வில் முன்னணி பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களும், பெற்றோர்களும் மற்றும் சைவ மாணவர் சபையினருடன் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குண ராசா ஐயா அவர்கள், யாழ்ப்பாண முன்னணி வணிக நிலையங்களில் ஒன்றான மங்களா காட்சியக முதல்வர் சிவத்திரு. குமாரசாமி ஜெயந்தன் அவர்களுக்கு முதல் இதழை வழங்கி, தென்னாட்டின் எழுபத்து நான்காவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்தார். மேலும் அன்றைய நாளில் சிறப்பு நிகழ்வாக, வழமைபோல் புலமைப்பரிசில் தேர்வில் முன்னணி பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கின்ற நிகழ்வும் இடம்பெற்றிருந்தது. அந்தவகையில் 188 புள்ளிகளுடன் அனைத்திலங்கை மட்டத்தில் முதலிடத்தைப் பெற்று, பாடசாலைக்கு அடையாளத்தையும் பெருமையையும் தேடித்தந்த மல்லாகம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி இளநிலை (கனிஷ்ட) வித்தியாலய மாணவன் செல்வன். சுரேந்தர் சபின் அவர்களையும், 180 புள்ளிகளுடன் வட மாகாணத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி செல்வி. கிரிசிகா சிறிபரன் அவர்களையும் சிறப்புச் செய்து கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றிருந்தது. இவர்களுக்கான கௌரவத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குண ராசா ஐயா அவர்கள் வழங்கிச் சிறப்பித்திருந்தார். தொடர்ந்து, அடியார்களுக்கு அமுது செய்வித்தலுடன் நிகழ்வு நிறைவடைந்தது.

(26-09-2026) – கடையிற் சுவாமிகளின் குருபூசை வழிபாடுகளும் சிறப்பாக இடம்பெற்றன. (08-10-2026) – தமிழ்ச் சைவ ஞானத் திருமட குருமகாசந்நிதானம் அருட்குருநாதர் சீர்வளர்சீர் ஞானஒளி அடிகளார் 48 அடியார் பெருமக்களுடன் வருகை தந்து ஐம்பூதநாதர் சன்னிதியில் வழிபாடாற்றி, தென்னாடு கோசாலை, மயில்வளாகம், நூலகம், திருமுறை சன்னிதி என்பவற்றைப் பார்வையிட்டார். அன்றைய நாளில் குருமகாசந்நிதானம் அவர்களுக்கு திருவடிப் போற்றி கொலுப்பூசை வழிபாடு ஆற்றி அருளாசி வழங்கல் இடம்பெற்றது. அடியார் பெருமக்களுக்கு அமுது செய்வித்தலும் இடம்பெற்றது.

(10-10-2026) – புரட்டாசி பேரொடுக்க மறைமதி (மாலயம்) சிறப்பு வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (11-10-2026) – ஒன்பானிரவு (நவராத்திரி) தொடக்கப் பூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. ICBT தனியார் உயர்கல்வி நிறுவனத்திலும் ஒன்பானிரவு (நவராத்திரி) தொடக்க சிறப்புப் பூசை வழிபாடுகள் செந்தமிழில் ஆற்றி வைக்கப்பட்டது. (20-10-2026) – ஒன்பானிரவு (நவராத்திரி) பத்தாம் நாள் சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. அன்றைய நாளில் அடியார்கள் பலரும் கூடி மங்கள வழிபாடுகள் ஆற்றி திருவருள் பெற்றிருந்தனர். ICBT தனியார் உயர்கல்வி நிறுவனத்திலும் ஒன்பானிரவு (நவராத்திரி) பத்தாம் நாள் பூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

(22-10-2026) – இராசராச சோழன் சதய விழா வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (23-10-2026) – ஐப்பசித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

திருச்சிற்றம்பலம்

இலங்கைப் பாராளுமன்ற ஒன்பானிரவு விழா-2026

இலங்கைப் பாராளுமன்றத்தின் 2026ஆம் ஆண்டுக்கான ஒன்பானிரவு (நவராத்திரி) விழா, 20-10-2026 அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. சபாநாயகர் முனைவர் சகத் விக்கிரமரத்ன தலைமையில், பாராளுமன்ற அலுவலர்களின் ஏற்பாட்டிலும் இந்து சமய, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பங்களிப்புடனும் இவ்விழா முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதமர் முனைவர் ஹரிணி அமரசூரிய, புத்தசாசன, சமய மற்றும் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹனிதும சுனில் செனவி, அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல முதன்மைப் பிரமுகர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நாட்டின் சமய நல்லிணக்கத்தை யும் தமிழர் சைவ மரபையும் பறைச ஆற்றும் வகையில் அமைந்த இவ் விழாவில், சிறப்புச் சமய வழிபாடு களும் ஒன்பானிரவு பூசைகளும் இடம்பெற்றன. இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் சிவாகம கலாநிதி சிவத்திரு வைத்தீசுவரக் குருக்கள், சனாதன அறப்பீடத்தின் தலைவர் சிவத்திரு சகதீசுவரக் குருக்கள் மற்றும் மயூராபதி அம்மன் கோயிலின் தலைமைக் குரு உதயராகவக் குருக்கள் ஆகியோர் இணைந்து இந்த அருள்மிகு வழிபாடுகளைச் சிறப்பாக நடத்தி வைத்தனர்.

அனோஜனின் மரண தண்டனைத் தீர்ப்பு மாறியது

பணி நிமித்தம் சவூதி அரேபியாவில் தங்கியிருந்த இலங்கைத் தொழிலாளி அனோஜன் சிவராசாவிற்கு, சமூக வலைத்தளக் கருத்து ஒன்றிற்காக விதிக்கப் பட்டிருந்த மரண தண்டனையை அந்நாட்டு உச்ச நீதிமன்றம் நீக்கியுள்ளது. சவூதி அரேபிய அரசின் இத்தகைய பெருந்தன்மையான செயற்பாடு, தங்களது சமய வழக்கங்களின் நன்மதிப்பை உலகிற்கு வெளிப் படுத்துகிறது.

பல்வேறு சமூக, சமய அமைப்புகள் அனோஜனின் மீட்பிற்காகத் தொடர்ந்து குரல் கொடுத்துப் போராடின. பலரின் தொடர் விண்ணப்பங்களாலும் இறையருளாலும் இச்செயல் இனிதே நடந்தேறியுள்ளது. குறிப்பாக, இவ்விடயத்தில் மிகுந்த அக்கறையெடுத்துச் சட்ட வல்லுநர் குழுவை அனுப்பி விரைந்து செயற்பட்ட சனாதிபதி அநுர குமார திசாநாயக்க அவர்களுக்கு 'தென்னாடு சிவமடம்' சார்பில் மனமார்ந்த நன்றிகள் தெரிவித்து மகிழ்கின்றோம்.

சைவம் நமக்குக் கற்பிப்பது அருள் வழி, அன்பு வழி மற்றும் அற வழியாகும். எனவே, அனைத்துச் சமயத்தினரும் ஒருவரது புனித நம்பிக்கைகளை மற்றொருவர் மதித்துப் போற்றும் உயரிய பண்பாட்டை வளர்க்க வேண்டும் என்பதே இந்நிகழ்வு உணர்த்தும் பாடமாகும்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழா

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் எழுபதாவது (70) ஆண்டு நிறைவு விழாவும் சிறப்பு மலர் வெளியீடும் கடந்த 04.10.2026 அன்று கொழும்பு, பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றன. மாமன்றத்தின் தலைவர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அம்மையார் தலைமையில் காலை 9.30 மணிமுதல் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இவ்விழாவில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அ. உமாமகேசுவரன் கலந்துகொண்டு சிறப்பித்தார். சிறப்புப் பேச்சாளராகப் பங்கேற்ற செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திரு முருகன் அவர்கள், மாமன்றத்தின் எழுபதாண்டு காலச் சமய, சமூகப் பணிகள் குறித்த சிறப்புரையை ஆற்றினார். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களப் பணிப்பாளர் ய. அனிருத்தனன் அவர்கள் உட்பட பல்வேறு சமயப் பெரியார்களும் தமிழ்ச் சான்றோர்களும் திரளாகக் கலந்துகொண்ட இந்நிகழ்வில், மாமன்றத்தின் வரலாற்றுப் பயணத்தைப் பறைசாற்றும் எழுபதாவது ஆண்டு நிறைவுச் சிறப்பு மலரும் வெளியிட்டு வைக் கப்பட்டது.

சைவபண்டிதர், இளஞ்சைவ பண்டிதர் பரீட்சை (2026) முடிவுகள்

சைவத் தமிழ் மன்றத்தின் அகில இலங்கை சைவ பண்டிதர் சபையினால் நடாத்தப்பட்ட சைவபண்டிதர், இளஞ்சைவ பண்டிதர் பரீட்சைகளுக்கான (2026) முடிவுகள் வெளியாகியுள்ளன. அதன்படி சைவ பண்டிதர் பரீட்சையில் எண்மரும் (08), இளஞ்சைவ பண்டிதர் பரீட்சையில் இருபத்தியேழு (27) பேரும் சித்தியடைந்துள்ளனர்.

சைவ பண்டிதர் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள்: தனிஸ்ரா சத்தியேந்திரா, புவனேஸ்வரன் ஜீவஅனோஜ், ராமன் ராமகிருஷ்ணன், ஹேமலோஜினி குமரன், சிவசுப்ரமணியம் ஸ்ரீகௌரி, பிரகாஸ்குமார் மிதுஷா, செல்வநாயகம் வதனி, கார்த்திகாஜினி பரமேஸ்வரன்.

இளஞ்சைவ பண்டிதர் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள்: வினோறஞ்சி சபேசன், நவரெத்தினம் ஷதுர்சிக்கா, லக்ஷாயிணி விஜயகுமார், வேலாயுதம் ஜனுஷன், நிர்மலநாதன் ரூகேஷ், மாமாங்கம் கிந்துயா, பத்மநாதன் லிஷாந்தினி, நாராயணசாமி கோமதி, ராஜ/தேவ வசந்தமலர், கமலநாதன் யோகிதா, கந்தசாமி ரசிகா தீபாஞ்சலி, பரமேஸ்வரன் சுதர்ஷிகா, கார்த்திகா சந்திரசுசர்மன், சிந்தியா தினேஸ்குமார், தட்சணாமூர்த்தி சசிகாந்தன், கணேசமூர்த்தி கமலினி, கந்தவனம் கீர்த்திகா, தேவதீலன் டிலக்ஷா, வேலுப்பிள்ளை கவிசாளினி, யோகேஸ்வரன் தமிழ்ப்பிரியா, பாலையா குமுதினி, தங்கராஜா பிரதிக்ஷா, தியாகராஜா லோஜிதா, லோகநாதன் ரிஷாகாயத்திரி, சதானந்தராசா ரேகா, ரவிந்திரமூர்த்தி ஜனகன், மகேஸ்வரன் பகீரதன்.

தஞ்சையில் இராசராசசோழன் 1041 ஆவது ஆண்டு சதய விழா

தஞ்சாவூர் அருள்மிகு பெருவுடையார் திருக்கோயிலில் மாமன்னன் இராசராச சோழனின் 1041ஆவது ஆண்டு சதய விழா கடந்த 21-10-2026 மற்றும் 22-10-2026 ஆகிய இரு நாட்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறையும் தஞ்சாவூர் அரண்மனை திருக்கோயிலும் இணைந்து முன்னெடுத்த இவ்விழாவில், மாமன்னன் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல், திருமுறைத் திருவீதியுலா மற்றும் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

விழாவில் தருமபுர ஆதீனம் 27ஆவது குருமகாசந்நிதானம் கயிலை மாமுனிவர் **சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** நேரில் எழுந்தருளி அருளினார்கள். இதன் போது தருமை ஆதீனத் தேவாரப் பாடசாலை உட்படப் பல்வேறு இசைக் கல்லூரி மாணவர்களும் ஓதுவாமூர்த்திகளும் இணைந்து திருப்பதிகச் சேர்ந்திசை வழங்கினர். மாலையில் ஐம்பதிற்கும் மேற்பட்ட திருமுறை இசைக்கருவிகள் முழங்க, வெள்ளி இடப ஊர்தியில் பெருவுடையார் திருவீதியுலா நடைபெற்றது. இந்நிகழ்வில் திருமுறை கலாநிதி, பண்ணிசைப் பேரறிஞர் கரூர் குமாரசாமிநாத தேசிகர் ஓதுவாருக்கு **'தேவார நாயகர்'** விருதும், திரு. கோ. இரவி, திரு. பழ. மாறவர்மன், திரு. இராசா. செல்ல பெருமாள், திரு. ஆதி. நெடுஞ்செழியன், திரு. ஆர். மகா லிங்கம் ஆகிய ஐவருக்கு **'மாமன்னன் இராசராசன்'** விருதும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டன.

திருவாவடுதுறை ஆதீனம் நடத்தும் 23 ஆவது திருமந்திர மாநாடு

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் திருவாவடுதுறை ஆதீனம் நடத்தும் 23ஆவது திருமந்திர மாநாடு, 51 ஆண்டுகளுக்குப் பிறகு 23-10-2026 முதல் 25-10-2026 வரை மூன்று நாட்கள் திருவாவடுதுறை அருள்மிகு கோமுத்தீசுவரர் திருக்கோயிலில் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

நந்தி அருள்பெற்ற திருமூலர், இத்திருத்தலத்துப் படர் அரசமரத்தின் கீழ் யோகத்திலிருந்து ஆண்டுக்கு ஒரு பாடலாக அருளிய மூவாயிரம் பாடல்களைக் கொண்ட பத்தாம் திருமுறையான திருமந்திரத்தின் பெருமையை உலகறியச் செய்யும் வகையில் இம்மாநாடு முன்னெடுக்கப்படுகிறது. ஆதீனத்தின் 24ஆவது குருமகாசந்நிதானம் **சீர்வளர்சீர் அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகளின்** அருளாணையின் வண்ணம் நடைபெறும் இவ்விழாவில், சைவப் பேரறிஞர்கள் பலர் பங்கேற்றுத் திருமந்திரத்தின் ஒன்பது தந்திரங்கள் குறித்தும் மரபு பிறழாத ஆய்வுரைகளை வழங்குகின்றனர்.



இம்மாநாட்டில் குருமகாசந்நிதானம் அவர்கள் **'திருமந்திரம் மூலம்', 'திருமூலர் அருளிய ஞான சாதனங்கள்', 'திருமந்திரக் கட்டுரை இரண்டாம் தந்திரம் (பாகம்-1)'** ஆகிய மூன்று நூல்களை வெளியிட்டு அருளுகிறார்கள். அதனைத் தொடர்ந்து, 26-10-2026 (திங்கள்கிழமை) ஐப்பசி அசுவதித்திருநாளில் திருமூலதேவ நாயனாரின் குருபூசை விழாவும் இனிதே நடைபெறவுள்ளது.

தென்னாடு

சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 575 2551 / aathan@thennadu.org

இறை துணை நிற்கட்டும்!

சைவமும் தமிழும் தழைக்க, சிவநெறி வளர்க்க, செந்தமிழ் மணம் பரப்ப, காலம் கடக்கும் சிந்தனைகளோடு தலைமுறைகளை இணைக்கும் பயணத்தில் **"தென்னாடு"** தனது எழுபத்தைந்தாவது இதழை வெளியிடுகிறது. இது சைவத்தையும் தமிழையும் வாழ்வின் இரு கண்களாகப் போற்றும் பண்பாட்டு மரபின் தொடர்ச்சியைக் கொண்டாடும் தருணமாகும்!

திங்கள் இதழ் ஒன்று தொடர்ந்து வெளிவருவது என்பது எழுத்துப் பணியோடு மட்டும் முடிந்துவிடுவதில்லை. அதற்குப் பின்னால் அயராத உழைப்பு, ஆழமான சிந்தனை, மொழிப்பற்று, சமயப் பற்றுறுதி, பொருளாதாரச் சவால்களை எதிர்கொள்ளும் துணிவு, வாசகர்களின் ஆதரவு எனப் பல கூறுகள் ஒன்றிணைந்திருக்கின்றன. இவற்றின் துணையோடு, எழுபத்தைந்தாவது இதழாக மலரும் **"தென்னாடு"**, தனது பயணத்தைத் திரும்பிப் பார்க்கவும் எதிர்காலப் பணிகளைச் சீர்தூக்கிப் பார்க்கவும் உரிய தருணத்தை எட்டியுள்ளது.

சைவம் என்பது வழிபாட்டுச் சடங்குகளின் தொகுப்பு அல்ல, அது, அன்பு, அருள், அறம், சமத்துவம், உயிரிரக்கம் ஆகியவற்றை வாழ்வில் நிலைநிறுத்தும் உயரிய நெறியாகும். **"அன்பே சிவம்"** என்ற திருமூலரின் அருள்வாக்கு! சைவத்தின் அடிப்படை மெய்ப்பொருளை உணர்த்துகின்றது. இறைவனை வழிபடுவதோடு நின்றுவிடாமல், உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவதும், துன்புறுவோருக்கு உதவுவதும், பிறர் நலனைப் பேணுவதும் சைவ வாழ்வியலின் இன்றியமையாத கூறுகளாகும். இத்தகைய சிந்தனைகளை வாசகர்களின் உள்ளங்களில் விதைத்து, ஆன்மிக விழிப்புணர்வை வளர்ப்பதில் சமய இதழ்களுக்கு முக்கியமான பொறுப்பு உண்டு.

தமிழும் சைவமும் வரலாற்றுப் பாதை நெடுகிலும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. திருமுறைகள் தமிழின் இனிமையையும் இறையுணர்வின் ஆழத்தையும் ஒருங்கே வெளிப்படுத்துகின்றன. தேவாரமும் திருவாசகமும் நமது வழிபாட்டு மரபின் உயிர்நாடிகளாக விளங்குகின்றன. அவற்றின் பொருளுணர்ந்து பாடுதல், அவற்றில் பொதிந்துள்ள வாழ்வியல் நெறிகளை இளைய தலைமுறைக்கு எடுத்துரைத்தல், தமிழில் வழிபடுவதன் சிறப்பை உணர்த்துதல் ஆகிய பணிகள் இன்றும் அவசியமானவையாக உள்ளன. தெய்வத்தமிழ் வழிபாட்டை வளர்ப்பதும், தமிழிசையைப் போற்றுவதும், சைவ இலக்கியச் செல்வங்களை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்பதும் இந்தப் பணியின் முக்கியமான பகுதிகளாகும்.

காலம் மாறுகின்றது. தலைமுறைகளின் சிந்தனைகளும் தொடர்பாடல் முறைகளும் மாறுகின்றன. இத்தகைய மாற்றங்களுக்கிடையில் மரபின் வேர்களைப் பாதுகாத்தபடியே புதிய தலைமுறையோடு உரையாட வேண்டிய தேவை எழுந்துள்ளது. சமயச் செய்திகளை வழங்குவதுடன் நின்றுவிடாமல், அவற்றின் மெய்ப்பொருளை ஆராய்ந்து, சமகால வாழ்வியலோடு தொடர்புபடுத்தி, அறிவார்ந்த விவாதங்களுக்கும் சிந்தனை வளர்ச்சிக்கும் இடமளிப்பதே ஓர் ஆக்கபூர்வமான இதழின் அடையாளமாகும். இவற்றை எல்லாம் தென்னாடு தன் இயலுமைக்கு ஏற்ப சுமந்தே இந்த தடத்தை அடைந்துள்ளது என்றால் அது மிகையல்ல!

எழுபத்தைந்து இதழ்கள் கடந்துள்ள இத்தருணத்தில், இதழின் வளர்ச்சிக்குப் பங்களித்த ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள், ஆன்மிகச் சிந்தனையாளர்கள், அச்சுப்பணியாளர்கள், ஆதரவாளர்கள் மற்றும் வாசகர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவுகூர்வது கடமையாகும். அவர்களின் ஒத்துழைப்பும் நம்பிக்கையும் இப்பயணத்தின் வலிமையாக அமைந்திருக்கின்றன.

எழுபத்தைந்து என்பதைத் தனியே ஒரு இலக்கின் அடையாளமாக நாம் பார்க்கவில்லை. மாறாகப் புதிய பொறுப்புகளின் தொடக்கத்தைக் குறிக்கும் அடைவாகக் காண்கின்றோம்! மரபின் வேர்களில் உறுதியாக நின்று, காலத்தின் தேவைகளுக்கேற்ப கிளைகளை விரித்து, சைவத் தமிழின் மணத்தை உலகெங்கும் பரப்புவதே நமது எதிர்கால இலக்காக என்றும் அமைய இறை துணை நிற்கட்டும்!

திருச்சிற்றம்பலம்

தென்சேரிமலை ஆதீன குருமகாசந்நிதானம் தவத்திரு முத்துசிவராமசாமி அடிகளார்

தென்னாடு வருகை (24-09-2026)

தென்சேரிமலை ஆதீன குருமகாசந்நிதானம் தவத்திரு முத்துசிவராமசாமி அடிகளார்

தென்னாடு வருகை (24-09-2026)

தமிழ்ச் சைவ ஞானத் திருமட குருமகாசந்நிதானம் அருட்குருநாதர் சீர்வளர்சீர் ஞானஒளி அடிகளார்

தென்னாடு வருகை (08-10-2026)

தமிழ்ச் சைவ ஞானத் திருமட குருமகாசந்நிதானம் அருட்குருநாதர் சீர்வளர்சீர் ஞானஒளி அடிகளார்

தென்னாடு வருகை (08-10-2026)

சிவபுராண விளக்க உரை



பேராசிரியர் சித்தாந்த சைவச் சுடர்மணி மீ.சிவசண்முகம், கோயம்பத்தூர், தமிழ்நாடு.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

"நனைந்தனைய திருவடி என் தலை மேல் வைத்தாய் நல்லூர் எம் பெருமானார் நல்லவரே"

"நன்மை பெருகும் அருள் நெறியே வந்தனைந்த நல்லூரில் மன்னு திரு தொண்டனார் வணங்கி மகிழுந்து எழும்பொழுது, உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்று அவர்தம் சென்னிமிசை பாதமலர் சூட்டினான் சிவபெருமான்"

என்று அப்பர் பெருமானின் வரிகளை நாம் இங்கு பொருத்திப் பார்க்கலாம்.

"இணையார் திருவடி என் தலைமேல் வைத்த லுமே துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்" இன்று மணிவாசகரின் மணி வாசகத்தை இங்கு நினைவு கூறலாம். திருவாதவ புராணத்தில் பெருமான் மணிவாசகருக்கு திருவடி தீட்சை கொடுத்தபின் மாணிக்கவாசகர் அந்த நீள் கழல்களை எடுத்து தன் கண்ணில் ஒற்றிக்கொண்டு, பின் தன் மார்போடு அணைத்துக்கொண்டார்.

60).61)."நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத் தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!"

தாய் சேயின் மீதுள்ள பாசத்தினால் மலமூத்திரங்களையும் பொருட்படுத்தாது உணவு ஊட்டி வளர்த்து வருவள். அவளும் சேய், நெறியல்லா நெறிக்கட்டுச் செல்லின் சீயென என வெறுப்பள். இறைவனும், விலங்கு மனத்தால் நலம் தான் இல்லாதவனாக இருந்தும், அவற்றை பொருட்படுத்தாத ஆண்டான் அருளினால் என்பார்.

"தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" என்றார். தாய்க்கும் சேய்க்கும் உள்ள தொடர்பு பிள்ளை பாசம். எனக்கும் உனக்கும் உள்ள தொடர்போ உனது தயா ஒன்றேயாம் என்ற நயம் உணரத்தக்கது. என்பது மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் உரை.

கிடந்த:- ஒரு செயலும் செய்யாமல் கிடத்தி இருக்கிறேன் என்பது பொருள். "என் பணி செய்து கிடப்பதே" என்பதில், தற்போதம் சிறிதும் இல்லாமல் பணி செய்து பின் அமைதியாக இருப்பதைத்தான் கூறுகிறார் திருநாவுக்கரசு பெருமான். **"அஞ்சு எழுத்தின் புணை**

பிடித்து கிடக்கின்றேனை" என்கிறார் திருச்சதகத்தில் மாணிக்கவாசகர். கிடக்கின்றேனை என்பது அதில் அழுந்தி இருப்பதை குறிக்கிறது.

மணிவாசகர் தன்னை நாயாகவும், நாய்க்கு கீழாகவும் தன்னை தாழ்த்திக் கொள்கிறார். "நாயில் கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்" என்று குழைத்த பத்தில் தன்னை நாயினுக்கும் கீழாக தாழ்த்திக் கொள்கிறார்.

நாய் குலத்தால் இழிந்தது. குணத்தால் உயர்ந்தது. என்றாவது ஒரு நாள் ஒருவன் நாய்க்கு உணவிட்டால் அவனை மறக்காது. நாயைப் போல நன்றியுடையவனாக இரு என்பது வழக்கு. ஆனால் தலைவனாகிய சிவபெருமான் செய்த உதவியை சிறிதும் நினையாமல் நான் நன்றி இல்லாதவனாக உள்ளேன். எனவே **"நாயிற் கடையாய் கிடந்த அடியேற்கு"** என்று சொல்லுகிறார்.

தகுதி இல்லாத என்னை ஏன் ஆட்கொண்டான்? என்ற கேள்விக்கு தாயிற் சிறந்த கருணையால் என்னை ஆட்கொண்டான் என்று கூறுகிறார்.

"தாயாய் முலையைத் தருவானே!
தாராது ஒழிந்தால் சவலையாய்"
"தாயே என்று உன் தாள் அடைந்தேன்
தயா நீ என்பால் இல்லையே" என்கிறார் ஆனந்த மாலையில்.

"நோயுற்று மூத்து நுந்து கன்றாய் இங்கு இருந்து,
நாய் உற்ற செல்வம் நயந்து அறியா வண்ணமெல்லாம்
தாயுற்று வந்து என்னை ஆண்டுகொண்ட தன் கருணை
தேயுற்ற செல்வற்கே சென்று ஊதாய் கோத்தும்பி"

தொழுநோய் வந்த தன் மகனை தாய் தன் மடியில் வைத்து பாதுகாப்பாள். எல்லோரும் கைவிட்டாலும் தாய் காப்பாற்றுவாள். ஆனால் அந்தத் தாயினும் சிறந்தவன் சிவபெருமான் என்று கூறுகிறார்.

"ஏசா நிற்பர், என்னை உனக்கு
அடியான் என்று, பிறரெல்லாம்
பேசா நிற்பர் யார் தானும்
பேணா நிற்பேன், நின் அருளே"

என்ற கோயில் மூத்த திருப்பதிகத்தில் மணிவாசகர் இறைவன் திருவடி தீட்சையை கொடுத்துவிட்டு உன்னை விட்டு விட்டு சென்று விட்டான் என்று ஏசுகிறார்கள். என்னிடம் தகுதி இல்லாததால் என்னை விட்டு விட்டு சென்று விட்டதாக கூறுகின்றனர். உன்னிடம் நான் அன்பு செலுத்தவில்லை அதனால் விட்டு விட்டு சென்று விட்டான் என்றும் இகழ்கின்றனர். ஆனால் இதை எல்லாம் ஏற்காமல் உன் அருளையே எண்ணி வாழ்கின்றேன் என்று கூறுகிறார்.

"அருவருத்து ஒருவன் அவனியில் வந்து குருபரன் ஆகி அருளிய பெருமையை சிறுமை என்று இகழாதே" என்றும் பதிவு செய்கிறார்.

"நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை,
பேயனது உள்ளப் பிழை பொறுக்கும் பெருமையனை
சீ ஏதும் இல்லாது, என் செய் பணிகள் கொண்ட அருளும்
தாயான ஈசற்கே சென்று ஊதாய் கோத்து தும்பி" என்று பெருமான் தாயை போன்றவன் என்று கூறுகிறார்.

"பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பறிந்து" என்று, சிவபெருமான் தாயினும் சிறந்தவன் என்று கூறுகிறார். பாம்பன் சுவாமிகள் திருவலங்கத் திரட்டு என்ற நூலில் திருப்பரங்குன்றம் என்ற தலைப்பில் முக்தி அடைய உனது தயவு வேண்டும் என்று கூறுகிறார்

"எந்தையே யிறையே யிணை யரு நிலையே
லிங்கியா னுய்ந்திலே னந்தோ
சிந்தை சேர்வானே திகழ் விழுப் பொருளே!
திருப்பரங்கிரி உறை சிவனே
பந்தமே போக்கிப் பதவருளாக்கிப்
பகலிர வண விடா நிலையில் சந்ததஞ் சேர்க்கத் தயவுசெய்யாயோ
சரவண சுயம்பெருமாளே!"

வரி (50-61) பொருள்:-

வலிய வினைகளை உடையவனாகிய என்னை மறையும் வண்ணம் மூடியுள்ள மாயம் பொருந்திய அறியாமையாகிய இருளை, புண்ணியம், பாவம் என்னும் அருங்கயிற்றினால் கட்டி வெளியே தோலை போர்வையாக இட்டு புழுவையும் அழுக்கையும் வெளித்தோன்றா வண்ணம் மறைத்து மலம் சொறியும் ஒன்பது வாசல்களை உடைய குடிசையை கலங்கும் வண்ணம் புலன்களைந்தும் வஞ்சனையைச் செய்ய, அதனால் நெறி தவறிச் செல்லும் மனத்தால், மலமற்றவனே! உன்னிடம் கலந்த அன்பை உடையனாகி மனம் கசிந்துருகும் தன்மை சிறிதும் அமையப் பெறாத சிறுமையை உடைய அடியேனுக்கும் திருவருளை உதவ, இப் பூமியில் வந்து புகழான் நெடிய திருவடிகளைக் காட்டி, நாயினும் கடைபட்ட அடியேனுக்கு தாயினும் சிறந்த கருணையே வடிவான மெய்ப்பொருளே! என்றவாறு. என்பது மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் உரை.

(தொடரும்)

திருச்சிற்றம்பலம்

அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்

"சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ண முரைசெய்வோம்"
ஒற்றியூரிலிருந்து திருவாரூரை நினைந்துருகிப் பாடுதல்

சுந்தரர் ஒற்றியூர் இறைவரின்திருவருளோடு சங்கிலியாரை மணந்து அவருடன் எழுந்தருளியிருக்கின்றார். நாள்தோறும் படம்பக்கப் பரம்பொருளையும் வணங்கி மகிழ்ந்திருக்க, கார், குளிர், பனி போன்ற பருவக் காலங்கள் கடந்து செல்கின்றன. இதனைச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு விவரிக்கின்றார்:

இந்நிலையில் பேரின்பம் இனிதமர்வார் இறையுறையும்
மன்னுபுகழ் ஒற்றியூர் அதனில்மகிழ் சிறப்பினால்
சென்னிமதி புனைவார்தம் திருப்பாதம் தொழுதிருந்தார்
முன்னிய காலங்கள்பல முறைமையினால் வந்தகல
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம் - திருப்பாடல் 269)

இளவேனில் காலம் வந்தெய்தியதும், தென்றல் வீசும் சூழலில் திருவாரூர் வீதிவிடங்கப் பெருமானையும், அத்தல வசந்த விழாவினையும் சுந்தரர் நினைந் துருகுகின்றார்.

பொங்குதமிழ்ப் பொதியமலைப் பிறந்துபூஞ் சந்தனத்தின்
கொங்கணைந்து குளிர்சாரல் இடைவளர்ந்த கொழுந்தென்றல்
அங்கணையத் திருவாரூர் அணிவீதி அழகர்அவர்
மங்கலநாள் வசந்தம் எதிர்கொண்டருளும் வகைநினைந்தார் -
(ஏயர்கோன் கலிக்காமர் புராணம் - திருப்பாடல் 270)

தியாகேசப் பரம்பொருளின் திருமுன்னர், கடந்த ஆண்டுகளில் நிகழ்ந்தேறிய பரவையாரின் ஆடல் பாடல்களை நேரிலேயே கண்டு கேட்டாற்போல உணர்ந்து நெஞ்சக் கசிவெய்துகின்றார்.

வெண்மதியின் கொழுந்தணிந்த வீதிவிடங்கப் பெருமான்
ஒண்ணுதலார் புடைபரந்த ஓலக்கம் அதனிடையே
பண்ணமரும் மொழிப் பரவையார் பாடல்ஆடல் தனைக்
கண்ணுறமுன் கண்டு கேட்டார் போலக் கருதினார்
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம் - திருப்பாடல் 271)

தம்மை நினைவாரைத் தாமும் நினைந்தருளும் திருவாரூர் இறைவனைத் வணங்கிப் பெற்ற சிவானந்தப் பேற்றினை நினைவுகூர்ந்து பதைபதைக்கின்றார். **"ஆரூர் இறைவனைப் பிரிந்திருந்தேனே"** என்று உளம் வெம்புகின்றார். பிரிவுத் துயரால் உருகிய வன்தொண்டர், **"பத்திமையும் அடிமையையும் கைவிடுவான் பாவியேன்"** என்று தொடங்கும் திருவாரூர்த் திருப்பதிகத்தைப் பாடித் தனது ஆராத காதலை வெளிப்படுத்துகின்றார்:

பத்திமையும் அடிமையையும் கைவிடுவான் பாவியேன்
பொத்தின நோயது இதனைப் பொருளறிந்தேன் போய்த்தொழுவேன்

முத்தினைமா மணிதன்னை வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனைநாள் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே
- (சுந்தரர் தேவாரம் - திருவாரூர் - திருப்பாடல் 1)

திருவொற்றியூர் எல்லையில் கண்பார்வை மறைப்பிக்கப் பெறுதல்

சங்கிலியாருக்குக் கொடுத்த வாக்கினை விட, ஆரூர் இறைவரிடத்துள்ள பெருங்காதலே வெல்கின்றது. அளித்த வாக்கினை மீறி, ஆதிபுரீசுவரப் பரம்பொருளைத் தொழுது ஒற்றியூர் எல்லையினைத் தாண்டிச் செல்ல முனைகின்றார். அக்கணமே திருவருளால் இருகண் பார்வையும் மறைக்கப்பட்டு மயங்கி வீழ்கின்றார்.

பின்னொருநாள் திருவாரூர் தனைப்பெருக நினைந்தருளி
உன்ன இனியார் கோயில் புகுந்திறைஞ்சி ஒற்றிநகர்
தன்னை அகலப் புக்கார் தாம்செய்த சபதத்தால்
முன்அடிகள் தோன்றாது கண்மறைய மூர்ச்சித்தார்
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம் - திருப்பாடல் 274)

உணர்வு பெற்றெழுந்து, ”சங்கிலிக்கு அளித்த வாக்கினை மீறியதால் இவ்வினை வந்தெய்தியது. இனி எம்பெருமானைப் பாடி இத்துயர் நீங்குவேன்” என்று எண்ணுகின்றார்.

செய்வதனை அறியாது திகைத்தருளி நெடிதுயிர்ப்பார்
மைவிரவு கண்ணார்பால் சூளுறவு மறுத்ததனால்
இவ்வினை வந்தெய்தியதாம் எனநினைந்(து) எம்பெருமானை
வெவ்விய இத்துயர் நீங்கப் பாடுவேன் எனநினைந்து
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம் - திருப்பாடல் 275)

“அழுக்கு மெய்கொடு” எனும் திருப்பதிகத்தைப் பாடி, தம் நிலையை ஆதிபுரீஸ்வரரிடம் எடுத்துரைத்துப் பிழை பொறுக்குமாறு மன்றாடுகின்றார்.

அழுக்கு மெய்கொடு என்றெடுத்த சொற்பதிகம் ஆதி நீள்புரி அண்ணலை ஓதி வழுத்து நெஞ்சொடு தாழ்ந்து நின்றுரைப்பார் மாதொர் பாகனார் மலர்ப்பதம்

உன்னி இழுக்கு நீக்கிட வேண்டும் என்றிரந்தே எய்து வெந்துயர்க் கையறவினுக்கும் பழிக்கும் வெள்கி நல்லிசைகொடு பரவிப் பணிந்து சாலவும் பலபல நினைவார் – (ஏயர்கோன் கலிக்காமர் புராணம் – திருப்பாடல் 276)

கண் பார்வை மறைந்த நிலையிலும், ஈசனின் திருநாமத்தை மறவாத தூய பத்தியோடு பதிகம் பாடுகின்றார்:

அழுக்கு மெய்கொ(டு) என்றெடுத்த சொற்பதிகம் ஆதி நீள்புரி அண்ணலை ஓதி
வழுத்து நெஞ்சொடு தாழ்ந்து நின்றுரைப்பார் மாதொர் பாகனார் மலர்ப்பதம் உன்னி
இழுக்கு நீக்கிட வேண்டும் என்றிரந்தே எய்து வெந்துயர்க் கையறவினுக்கும்
பழிக்கும் வெள்கி நல்லிசைகொடு பரவிப் பணிந்து சாலவும் பலபல நினைவார்
- (சுந்தரர் தேவாரம் - திருவொற்றியூர் - திருப்பாடல் 1)

ஒற்றியூர் முதல்வர் பார்வையை அருளாதிருக்க, ”இறை அருள் இதுவே” என்று உளம் வெதும்பியவாறு, ஆங்காங்கே செல்வோரிடம் வழிகேட்டவாறே திருவாரூர் நோக்கித் தம்பிரான் தோழர் பயணிக்கின்றார்.

திருச்சிற்றம்பலம்

சிவத்திரு. தென்னாடு நிலவன்
படம்-தேவராஜன் நடராஜன்

சிவபூமியில் சிவனைத் தேடி

மட்டக்களப்பு மண்முனைப் பகுதியில் அமைந்திருந்த ஆரையம்பதி கோயில் குளம் காசிலிங்கேச்சுரர் கோயில்

சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

காசிலிங்கேச்சுரர் கோயிலின் சிதைவுகளை கொண்டு பெரிய அளவில் கட்டுவிக்கப்பட்ட கோயில் ஆரையம்பதி கந்தசுவாமி கோயில்

மட்டக்களப்புப் பிரதேசத்தின் சைவத்தொன்மைக்கும் அதன் பண்பாட்டு மரபுகளின் தனித்துவத்திற்கும் இலக்கணமாய் விளங்கும் திருக்கோயில்களில், இன்று முற்றாக அழிக்கப்பட்டு, 2014 ஆம் ஆண்டு தேசிய தொல்பொருளியல் திணைக்களத்தினால் தேசிய தொன்மையான இடம் என்று அறிவிக்கப்பட்ட ஆரையம்பதி கோயில் குளம் காசிலிங்கேச்சுரர் சிவாலயம், உலகநாச்சி வரலாற்றோடு தொடர்புடைய பண்டைய கோயிலாகும். சைவர்களின் புண்ணிய தலமான காசியில் இருந்து கொண்டு வரப்பட்ட இலிங்கம், எழுந்தருளச் செய்யப்பட்டமையால் இங்குள்ள இறைவனுக்குக் காசிலிங்கேசுவரர் என்ற திருப்பெயருடன் மண்முனைப் பிரதேசத்தவரால் போற்றப்பட்டும் வந்துள்ளது.

அமைவிடமும் கிராமச் சிறப்பும்

மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்கே மண்முனைப் பற்றுப் பிரதேசத்தினுள் ஆரையம்பதியில் கோயில் குளம் எனும் பண்டைய கிராமத்தில் இச்சிவாலயம் அமைந்துள்ளது. ஆரையம்பதி கல்விக்கும் கலைக்கும் புகழ்பூத்த இடமாகும். இவ்வூரின் சிறப்பிற்கு அணிகலன்களாகப் பிரதானவீதியில்அலங்காரமாகநிறுவியுள்ள உலகநாச்சி, கலிங்க மாகோன், விபுலானந்தர் ஆகியோரின் சிலைகள் தக்க சான்றாகும்.

கோயில் குளம் காசிலிங்கேச்சுரர் கோயிலின் தொன்மை வரலாற்றினை ‘மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்’ எனும் இலக்கியத்தினூடாகவும், அக்கோயிலின் அகழ்வுகளின் போது கிடைத்துள்ள தொல்லியல் சான்றுகள் மூலமாகவும் அறிந்துகொள்ள முடிகின்றது.

வரலாற்றுப் பின்னணி: உலகநாச்சியின் வருகை

மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் பின்வருமாறு குறிப்பிடப்படும் வரலாறு, கோயில் குளம் காசிலிங்கேச்சுரர் கோயிலாக இருக்க வாய்ப்பிருக்கின்றது:

“...குணசிங்கன் மட்டக்களப்பைக் கலி பிறந்து மூவாயிரத்து ஐந்நூறாம் ஆண்டு ஆட்சி செய்துவந்த காலத்தில், கலிங்க ஒரிசா தேசத்தை அரசு புரியும் குகசேனனுடைய மகள் உலகநாச்சி என்பவள் கௌதம புத்தருடைய புனிதப்பல்லை எடுத்து நெடுங்கூந்தலுக்குள் மறைவாய் வைத்துக் கைலயங்கிரியிற் குகவம்சத்தார் முற்காலத்தில் வைத்த சிவலிங்கத்தையும் எடுத்துக் கொண்டு தனது தமையன் உலக நாதனிடமும் தனது தந்தை குகசேனனிடமும் விடைபெற்று வணிகருடைய படகிலேறி மணிபுரத்திலிறங்கி விசய தீபத்தில் வந்து மேகவண்ணனைக் கண்டு குலம் குடிப்பெயரெல்லாம் விளங்கப்படுத்திப் புத்தருடைய தந்தத்தைக் கொடுத்தாள்.

மேகவண்ணனும் புத்த மதத்துக்கு இனி அச்சமில்லை என்று அதிக மகிழ்ச்சி கொண்டு உலக நாச்சியை நோக்கி உமக்கு வேண்டியதைக் கேளுமென்றலும், உலகநாச்சியும் அரசனிடம் இந்த இலங்கையில் காடு செறிந்து குடிவாழ்வில்லாத கிராமமொன்றையும் படி வேண்டினாள். அதைக் கேட்ட மேகவண்ணன்,

மட்டக்களப்பை அரசு புரியும் குணசிங்கன் தனது நண்பனாதலால் ஒரு திருமுகம் வரைந்து அதில் **“உமது மட்டக்களப்பு உன்னரசகிரி இவைகளில் காடு செறிந்து குடிவாழ்வில்லாத பதி ஒன்று இந்த உலக நாச்சிக்கு கைலஞ்சமாய் ஈந்து கொடுக்கும் படி”** வேண்டி, உலக நாச்சிக்கு கொடுக்கும் உதவிகளையும் இரத்தினமாலையையும் கொடுத்து மட்டக்களப்புக்கு அனுப்பி வைத்தான்.

குணசிங்கனும் திருமுகத்தை வாசித்து பரம்பரையுரிமை கொண்டாடி, மட்டக்களப்புக்கு வடபாகமாயுள்ள அம்பிலாந்துறைக்கப்பால் மண்ணேறி முனை வளர்ந்து காடு செறிந்து குடிவாழ்வற்ற பகுதியை நிந்தமாயீந்து ஒரு இடத்தில் குடிகளை அனுப்பி வெட்டித் தூர்த்து மாளிகை உண்டாக்கி உலகநாச்சியும் குடிவாழ்ந்து சிலகாலம் சென்றபின் தனது தம்பி சிவநாதனை தந்தையிடத்திலனுப்பிக் குகன் குடும்பம் நூற்றாறும், சிறைக்குடும்பம் முப்பதும் எடுப்பித்துக் குகன் குடும்பங்களைத் தன் அருகாயிருத்தி இந்த இடத்தில் திருக்கோயில் இயற்றிச் சிவலிங்கத்தை ஸ்தாபித்து வணங்கி வந்தனர்”. இவ்வரலாற்றின் எச்சமிச்சம் மகாவம்சத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சுரர் தோற்றமும் காசிலிங்கேசுவரமும்

இவ்வரலாற்றோடு ஒட்டிய செய்தியொன்றைத் தமிழ்மணி சிவ. விவேகானந்த முதலியார் குறிப்பிடுகையில்:

“உலகநாச்சி மண்முனைப் பிரதேசத்தை ஆட்சி புரியும் காலத்தில் வேடனொருவன் கொக்கட்டிச் சோலைக் காட்டை வெட்டும் போது, ஒரு கொக்கட்டி மரத்திலிருந்து குருதி பாய்ந்தது. இச்செய்தியை உலக நாச்சிக்கு அறிவிக்க, அவள் காசிலிங்கேச்சுரர் திருக்கோயிலிலிருந்து சூலம், மணி, தீபக்கால் மற்றும் பூசைப் பொருட்களுடன் திருவோலக்க வீரசைவக் குருமாருடன் கொக்கட்டிச் சோலைக்கு வந்து குருதி பாய்ந்த இடத்தைப் பார்த்த போது, அவளது கண்ணுக்குச் சிவலிங்கம் ஒன்று காட்சி கொடுத்தது. அவ்விடத்தில் கொத்துப் பந்தல் அமைத்துப் பூசை செய்து திரும்பினாள். அவ்விடத்தில் காலப் போக்கில் ஒரு கோயிலை அமைத்தாள். ஒவ்வொரு ஆண்டும்

காசிலிங்கேசுவரர் திருக்கோயிலிலிருந்து சூலங் கொண்டு சென்று கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சுரர் கோயிலில் திருவிழாவை ஆரம்பித்து வைத்தாள். அவள் காலத்தின் பின்பும் அவ் வழக்கம் இருந்தது” என்கின்றார். இவரின் கருத்துப்படி கொக்கட்டிச் சோலை சிவன் கோயிலுக்கு முன்னிருந்த மூத்த கோயிலே காசிலிங்கேசுவரம் என்பது உறுதியாகின்றது.

போர்த்துக்கேயர் ஆக்கிரமிப்பும் தொல்லியல் எச்சங்களும்

1627 ஆம் ஆண்டு ‘அசவிடோ’ என்னும் போர்த்துக்கேய தளபதியால் முற்றாக இவ்வாலயம் அழிக்கப்பட்டது. இன்று ஆரையம்பதியின் தெற்கே, இத் திருக்கோயில் அமைந்த பகுதி மண்மேடாகக் காட்சியளிக்கின்றது. 1988, 1989 ஆம் ஆண்டுகளில் இவ்விடத்தில் மணல் அகழ்வு செய்யப்பட்ட போது ஒரு சிவாலயம் இருந்தமைக்கான ஆதாரம் கிடைத்துள்ளது.

செங்கற்களைக் கொண்டு அகலமாகப் போடப்பட்டுள்ள அத்திபாரத்தின் பாகங்கள், சிறிய

படிகலிங்கம், ஐந்துதலை நாகத்தின் கீழ் உள்ள திருமால் சிலை, வழிபாட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட பெரிய விளக்கின் உதிரிப்பாகங்கள், காண்டாமணி, 15 அடி அங்குலச் சதுரமும் 12 அடி உயரமும் கொண்ட கருங்கற்றூண்கள் என்பன கண்டெடுக்கப்பட்டன. இத்தூண்கள் ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலில் வைத்துக் கட்டப்பட்டுள்ளது. மற்றும் ஒரு வெள்ளைக் கல்லில் செதுக்கப்பட்ட ஆனைமுகனின் புடைப்புச் சிற்பம், திருக்கோயிலின் முன்பு நீர்ச்சுனையாகக் காணப்பட்ட தீர்த்தக் குளம் இருந்தமைக்கான தடயங்கள் ஆகிய தொல்லியல் எச்சங்களையும், இங்கு பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும் கிராமவாசிகளின் வாய்மொழிக் கதைகள் மூலமாகவும், கோயில் குளத்தில் திருவுருவம், தலம், தீர்த்தம் என்னும் சிறப்புக்களுடன் சிகரத்துடன் கூடிய ஈசுவரம் ஒன்று அமைந்திருந்து போர்த்துக்கேயரின் அழிவைத் தொடர்ந்து யாரும் கவனிப்பாரின்றி இறந்து விட்டது என்பது உண்மையாகும்.

இக் கோயிலின் வரலாறுகள் மேலும் அகழ்வாய்வுகள் மூலம் துவக்கப்பட வேண்டும். அழிந்த திருக்கோயில் அவ்விடத்தில் மீண்டும் உயிர் பெற்று எழ எல்லாம் வல்ல சிவபெருமான் அருளாட்சி புரிய வேண்டும்.

வீரசைவப் பண்பாட்டு மரபும் தற்கால நிலையும்

மட்டக்களப்பு சைவக் கோயில்கள் பெரும்பான்மை யானவை வீரசைவப் பண்பாட்டு மரபுத் தாக்கத்திற்குட்பட்டு இருந்தவை ஆகும். உலகநாச்சியின் ஆதிக்கத்திற்பட்ட கொக்கட்டிச்சோலை வீராகமச் செல்வாக்கும் வீரசைவ நெறி தழுவிய சிவன் கோயிலாகத் தற்போதும் திகழ்கின்றது. அதே போல் கோயில் குளத்தில் அமைந்த காசிலிங்கேசுவரர் திருக்கோயிலும் வீரசைவ நெறி தழுவியதாகவே இருந்திருக்கின்றது. இதன் எச்சத்தை இன்று ஆரையம்பதியில் வாழும் மக்களிடையே நிலவும் சமய சமூக பண்பாட்டுச் சடங்குகளில் வீரசைவத் தாக்கம் நிலவி வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.

இக் கோயிலின் பண்டைய இருப்புப் பற்றி பேராசிரியர்சி.பத்மநாதன்,க.மகேஸ்வரலிங்கம்,மா.காசிப்பிள்ளை, சீ. கோபாலசிங்கம் போன்றோர் தமது கட்டுரையாக்கங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

1627 ஆம் ஆண்டில் இக் கோயில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்போது அங்கிருந்த மக்கள் குடிபெயர்ந்து அருகில் ஆரையம்பதிக்குச் சென்றனர். அங்கு சிவ சின்னமான சூலாயுத வழிபாட்டுடன் ஒரு திருக்கோயில் தோற்றுவிக்கப்பட்டது. பின்னாளில் அங்கு உருவான செல்வா நகர் குடியேற்றமும், மக்களின் பக்தியாலும் சீர்மிகு சிவனேச்சுரர் சிவன் கோயிலாக வளர்ச்சி பெற்றுள்ளது. இங்கு நுவரெலியா இலங்காதீச்சுரர் திருக்கோயில் காயத்திரி சித்தர் முருகேசு சுவாமி அவர்களால் சிவலிங்க எழுந்தருளச் செய்யப்பட்டு, ஆண்டுதோறும் திருவிழாவும், தைப்பூசம், சிவனிரவு, திருவாதிரை திருவிழா, திருவெம்பாவை ஓதுதல், நவராத்திரி முதலிய சிறப்புப் பூசை வழிபாடுகளும் இடம் பெற்று வருகின்றன. இச் சிவனார் கோயில் கோயில் குளம் காசிலிங்கேசுவரத்தின் மறுவடிவ எச்சமாக இக் கிராமத்தவர்களால் பார்க்கப்படுகின்றது.

தற்போது மண்முனையில் உலகநாச்சியும் காசிலிங்கமும் சிலையாகக் காட்சிப்படுத்தப்பட்டுள் ளது.

தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்

சிவஞானச் செல்வர்.
மருத்துவர்
ஈசான பிரதாபன்
தேசிகர்

தமிழரில் சிலர் கம்பராமாயணமே தனிசிறந்த தமிழ் நூலென்று ஒரு மாயத்தோற்றத்தை உருவாக்கி நிற்பது ஏற்புடையதா?

தமிழில் பல்வேறு காப்பியங்கள் எழுந்துள்ளபோதிலும், வரலாற்றினைத் தெளிந்து கொள்வதற்கு ஏதுவாக விளங்குவதும், பொருள் விழுப்பம் உடையதும், பாநயம் உடையதுமான நூல் தெய்வச்சேக்கிழார் பெருமான் அருளிய பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணமேயாம். காலத்தால் முந்தியது பெரியபுராணம். காலத்தால் பிந்தியது கம்பராமாயணம். பெரியபுராணத்தின் **'உலகெலாம்'** என்னும் முதற் செய்யுளையும், கம்பராமாயணத்தின் 'உலகம் யாவையும்' என்னும் முதற் செய்யுளையும் சிந்தித்தால், ஒருபானை சோற்றுக்கு ஒருசோறு பதம் என்பதுபோல் உண்மை துலங்கும். சைவப்பெரியார் கா. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் **"சேக்கிழார் சுவாமிகளின் சரித்திரமும் பெரியபுராண ஆராய்ச்சியும்"** என்னும் நூலில் இவ்விரு நூல்களையும் சிந்தித்துப் பெரியபுராணத்தின் உயர்வை நன்றே உணர்த்தியுள்ளார். தமிழிலே மெய்யெழுத்துக்கள் வல்லினம், மெல்லினம், இடையினம் என்று மூன்று வகைப்படும். க்,ச்,ட்,த்,ப்,ற் என்னும் மெய்யெழுத்துக்கள் வல்லினமாகும். ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் எழுத்துக்கள் மெல்லினமாகும். ய், ர், ல், வ், ழ், ள் என்னும் எழுத்துக்கள் இடையினமாகும்.

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்
- பெரியபுராணம் முதற் செய்யுள்

உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகு இலா விளையாட்டு உடையார்- அவர்
தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே
- கம்பராமாயணம் முதற் செய்யுள்

பெரியபுராணத்தின் முதற் செய்யுளாகிய 'உலகெலாம்' திருப்பாடலினையும், கம்பராமாயணத்தின் 'உலகம் யாவையும்' என்னும் முதற் செய்யுளையும் எடுத்து நோக்கும்போது, பெரியபுராணத்தின் முதற் செய்யுளில் காணப்படும் ஓசைநயமும் பொருள்நயமும் ஒப்பற்றதென்பது இனிது புலனாகும். உலகெலாம் உணர்ந்து திருப்பாடலின் முதல்வரியில் காணப்படும் ககரம் என்னும் வல்லின எழுத்து, இடையினமாகிய லகரத்தோடு கலந்து நிற்பதனால், அதன் வல்லோசை மெலிவுற்றுள்ளது. தகரமெய்களும் மெல்லினம்,இடையினம் எழுத்துக்களுடன் கலந்து மென்மையடைந்துள்ளன. முதலடியின் ஈற்றுச்சீரிலுள்ள ககரமானது ஓதுதற்கு என்னுஞ் சொல்லும் அரியவன் என்னுஞ் சொல்லும் புணரும்போது, புணர்ச்சியால் உதித்து நிற்பதாகும். எனவே, முதலடியின் ஈற்றுச்சீரில் காணப்படும் ககரம் கடவுளின் அருமையை உணர்த்தும் வகையிலும், முதலடியின்கண் மெல்லோசையின் நயம் விளக்கும் வகையிலும் அமைந்துள்ளது.

பெரியபுராணச் செய்யுளின் இரண்டாம் அடியில் எந்தவொரு வல்லெழுத்தும் இல்லை. பிறை மதியைச் சூடிச் பிறைமதிக்கு வாழ் வளித்த அருட்கருணையையும், கங்கையைச் சடையில் அமர்த்தி உலகாருக்கு தஞ்சமளித்த அருட்கருணையையும் உணர்த்துவது இரண்டாம் அடியாகும். எனவே,கடவுளின் கருணையைச் சொல்லும் அடியாக விளங்குவதால் இரண்டாம் அடியில் வல்லெழுத்துக்களைத் தெய்வச்சேக்கிழார்பெருமான் தவிர்த்திருப்பது கருத்திற்கு இனியதாகவுள்ளது.

கம்பராமாயணத்தின் **'உலகம் யாவையும்'** என்னும் முதற்செய்யுள் **'உலகெலாம்'** என்னும் பெரியபுராணச் செய்யுளைப்போல் அமைக்கக் கருதி உருவாக்கப்பட்ட பாடல் என்பது நன்றே விளங்கும். எனினும், வல்லோசை மிகுந்து புழுகுவதும், கடவுளின் காத்தல் தொழிலைச் சொல்லும் இரண்டாம் அடியில் வல்லோசையே வலுத்து நிற்பதும் கண்கூடு. முதலடியில் ஈற்றுச்சீராகிய ஆக்கலும் என்பதே பொருளுணர்த்தப் போதியதாக இருக்கும்போது, உளவாக்கலும் என்னும் சொற்பதம் மிகையாகி நிற்கின்றது. மேலும், படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலும் உணர்த்தும் முறைமையிலும், தெய்வச் சேக்கிழார் **'ஆடுவான்'** என்பதனால் ஐந்தொழில் உணர்த்தும் முறைமை, பொருள் விழுப்பத்தைச் சுருங்கக் கூறும் உத்திக்குத் தக்க சான்றாகி நிற்கின்றது. மேலும், **'விளையாட்டுடையன்'** என்பது கிரீடப்பிரம்மவாதியர் மதக்கொள்கைக்கே பெரிதும் தொடர்புடையது. சைவசமயத்தில் சிவபெருமான் ஐந்தொழில்களையும் விளையாட்டாகச் செய்கின்றான் என்பது, எந்தவொரு வேறுபாடும் அடையாமற் செய்கின்றான் என்பதனை உணர்த்தவேயொழிய் உயிர்களுக்கு இன்ப துன்பங்களைக் கொடுத்து இரசிக்கும் இயல்பினன் என்பதற்கன்று! முதற்செய்யுளின்கண் தலைமைபெற்று விளங்கும் சொல்லாட்சி பொருள் மயக்கத்தைக் கொடுப்பது சிறப்பன்று.

'உலகெலாம்' செய்யுளின் பொருள் விழுப்பம் கடல்போல் பரந்ததும் ஆழமானதுமாகும். சிந்தித்தால் இக்கேள்வி பதில் விரிந்துவிடும். எனினும், தெய்வச்சேக்கிழார் பெருமான் நமக்கு அளித்துள்ள பெரியபுராணத்தின் பொருள் விழுப்பம்,சொல்நயம்,பாநயம் முதலியனவற்றைச் சிந்திக்கும் போது ஏனைத் தமிழ்க் காப்பியங்கள் ஒப்பாகா என்பதனைத் தமிழர் நன்குணர்தற் பொருட்டு முதற்செய்யுளின் சிறப்பில் சிலவே இவ்விடத்தில் விளக்கப்பட்டது.

(தொடரும்)

ஈழத்துச் சித்தர்கள்

கடையிற் சுவாமிகளும் சீடர்களும்

சித்த வைத்தியர்
கனேஸ் கபிலன்
(யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

உசன் சமாதி மடம்

உசன் மடத்தைப் பற்றி நான் அறிந்தவற்றையும் சென்று பார்த்ததையும் கொண்டு சில தகவல்களையும் எழுதுகின் றேன்.

சைவ சமயத்தை வளர்ப்பதற்கென ஒவ்வொரு காலத்திலும் ஏராளமான மடங்கள் நம் ஈழத்துப் பூமியில் தோன்றின. இப்போது அவற்றில் பல அழிவடைந்து விட்டன. அப்படி பிரசித்தி வாய்ந்த மடம் தான் இப்போது உசன் மடம், உசன் சமாதி மடம் என பல பெயர்களால் அழைக்கப்படும் மடம். இம்மடத்திற்கு முதலான மடம் தான் பொன்னம்மாள் மடம். இப்போதுள்ள சமாதி மடத்திற்கு அருகில் வடக்குப் பக்கமாக இருந்ததாகவும் இப்போது இம்மடம் அழிவடைந்து விட்டது என்பர். இம்மடத்தில் தான் பொன்னம்மாள் அம்மையாரின் சமாதி உள்ளதாக கூறப்படுகின்றது. சமாதிக்கு மேல் சிவலிங்கம் இருந்ததாகவும் இப்போதுள்ள முதியோர் நினைவுகூர்கின்றனர். வடக்கு பக்கமாக நடுகல் ஒன்று வைத்து வழிபட்டதாகவும் செவிவழிக் கதைகள் தெரிவிக்கின்றன. அவ்விடத்தில் தான் மடம் இருந்திருக்கலாம் என்று கூறுகின்றனர். தியான மண்டபமும் இருந்ததாகவும் கூறப்படுகின்றது. குருபூசை நிகழ்வுகள், கூட்டுப் பிரார்த்தனை வழிபாடுகள் என பல நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. ஏராளமான துறவிகள் தங்கிச் செல்வதுமுண்டு.

தென்னந்தோட்டங்களுக்கு இடையில் இம்மடம் இப்போது அமைந்துள்ளது. ஆரம்ப காலங்களில் இதைவிட மிக அழகாகவும் ஆன்மீகச் சூழலுடன்

அமைந்திருந்ததாகவும் பலர் கூற கேள்விப்பட்டுள்ளேன். இப்போது இம்மடத்தில் அமைந்துள்ள பெரிய கோயிலில் கருவறையில் பீடம் அமைக்கப்பட்டு சிவகாமியம்மனின் திருவுருவச்சிலை உள்ளது. அதைவிட முருக வேல், விநாயகர் ஆகியோருக்கு சிறிய சந்நிதி உள்ளது. வெளியில் வைரவர் சந்நிதி உள்ளது.

கருவறையில் தான் பொன்னம்மாள் அம்மையாரின் சமாதி உள்ளதாக சிலர் கூறினாலும் மேலே கூறியபடி இம்மடத்திற்கு அருகில் தான் அவரது சமாதி இருந்ததாகவும் அது போர்ச்சூழல் காரணமாகவும், கவனிப்பின்மை காரணமாகவும் சேதமடைந்திருக்கலாம் என்றும் சிலர் கூறுகின்றனர். பொன்னம்மாள் சாமியார் வழிபட்ட அம்மன் சிலை இதுதான் என்றும் கூறப்படுகின்றது. போர்ச்சூழலில் இவ் அம்மன் சிலை

நீர்வேலியில் ஒரு அம்மன் கோயிலில் வைத்து வழிபட்டதாகவும், அம்மன் கனவில் தோன்றி தன் பழைய இடத்திற்கே கொண்டுபோகும்படி சொன்னதாலும், ண்டும் அந்த அம்மன் சிலையையே அங்கு எழுந்தருளச் செய்து குடமுழுக்கு நடத்தினார்கள்.

இம்மடத்தை கவனித்துக் கொண்டவர் சடைவரத சுவாமிகள். இவருக்கு சமாதி இல்லை. ஏழாலை மயானத்தில் நினைவாலயம் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஏழாலை கருணாகரப்பிள்ளை யார் சாதுசங்க மடாலயக் கோயிலில் இவருக்கு நினைவாலயம் உள்ளது. இங்கு தான் அவர் இறைநிலை அடைந்தார்.

கருவறைக்கு வலது புறமாக மங்கையற்கரசி யம்மையார், சிந்தாமணியம்மையார் இருவரதும் சமாதிகள் அருகருகே அமைக்கப்பட்டுள்ளன. சமாதியின் மேலே சங்கு வைக்கப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் சகோதரிகள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் இருவரும் சடைவரத சுவாமிகளின் பெண் சீடர்கள் ஆவார்கள். இவர்களது மற்றைய சகோதரி ஒருவரும் இவர்களோடு இருந்ததாக கூறப்படுகின்றது.

மேலும் இவர்களது சமாதிக்கு இடது புறமாக தென்னை மரத்திற்கு கீழே சங்கானை நாகலிங்க பரதேசியாரின் நினைவுகல் வைக்கப்பட்டுள்ளது. இவருக்கு சமாதி இங்கு உள்ளதாக கூறப்படுகின்றது. இவரை இம்மடத்திற்குப் போய் இருக்கும்படி கூறியதே யோகசுவாமிகள் தான். பூசையம்மா என்று கூறப்படுபவர் நாகலிங்கப் பரதேசியாரின் ஒன்றுவிட்ட சகோதரி என்று கூறப்படுகின்றது.

இதை விட சில துறவிகள் இம்மடத்துடன் தொடர்பு பட்டுள்ளனர். யோக சுவாமிகள், அப்பாத்துரை சுவாமிகள், தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் என சிலரைக் கூறலாம். மேலும் உசன் மடத்துடன் தொடர்புடைய கடையிற் சுவாமிகள், முருகேசு சுவாமிகள், பொன்னம்மாள் அம்மையார் மற்றும் சடைவரத சுவாமிகள் பற்றிய குரு தோத்திரமும், குருபூசை பற்றியதான ஆத்மஜோதியில் வெளியான குறிப்புகள் உள்ளன.

குருவணக்கம்

மூவுலகுந் தொழுதேத்துங் கடையில் நாதன்
முளரிமலரடி பணியுங் காசிப்பெம்மான்
தாவிலருள்பெற்ற முருகேச வள்ளல்
தனைப்பரவும் பொன்னம்மாளடிகள் போற்றி
மேவியசீர்ச் சடைவரத நாமத்தோடும்
மேதினியி லெனைப்போலோர் வடிவங்காட்டி
ஓவிலருள்புரிந்து பவக்கடலினின் றென்னை
உயவெடுத்தானவன் கருணையுரைக் கொணாதே
அன்புருவா யெனையாண்ட சடைவரத
குருவினடி யிணைகள் வாழி
அன்புருவாய் நிறைந்ததிருப் பொன்னம்மா
ளடிவாழி அடியார் வாழி
அன்புருவாங் குருபதத்தைப் பிரியாம
லெந்நாளும் அடியேன் வாழி
அன்புருவா யிவ்வேழை பெற்றதிரு
அருளின்பம் வாழி வாழி. (அருளானந்தசிவம்)

அருட்குரவர்வாழ்த்து - (சீத்தலையன்)விருத்தம்

அருட்குரவன் சடைவரதன் அடிவாழியவன் றன்னையன் பாலாண்ட
அருட்டேவி பொன்னம்மாள் அடிவாழியவட் கருளுமாசானாகும்
அருட்பாவு முருகேசவண்ணலுடனருங் காசியடிகள்வாழி
அருட்பரம் குருகடையிற்சாமியடியார்களனு தினமுமவாழி.

கடையிற்சுவாமிகள் சந்ததியும்
குருபூசை நட்சத்திரங்களும்

கடையிற் சுவாமிகள் - புரட்டாசி பூரட்டாதி
காசிச் சுவாமிகள் - கார்த்திகை திருவாதிரை
முருகேசசுவாமிகள் - ஆவணி உத்திரம்
தேவி பொன்னம்மா - கார்த்திகை உத்திரம்
சடைவரதசுவாமிகள் - ஆடி உத்திரம்

(தொடரும்)

திருச்சிற்றம்பலம்

எல்லாம்வல்ல பரம்பொருளால் "அம்மையே" என்று சிறப்பிக்கப்பட்ட தெய்வப்பேறு கொண்ட காரைக்கால் அம்மையார்



சிவத்திருமதி.
நவிசா சுஜிந்தன்
ஆய்வு மாணவர்,
முதுதத்துவமாணி

பத்தி இலக்கிய காலத்திற்கு முன்பே இசைத்தமிழால் இறைவனைப் பாடியதால் 'இசைத்தமிழின் அன்னை' எனச் சிறப்பிக்கப்பட்ட இவர், காரைக்கால் எனும் நகரில் தனதத்தன், தர்மவதி தம்பதியருக்கு மகளாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் புனிதவதி. சிவ வழிபாட்டில் ஈடுபாடு கொண்ட வணிகக் குடும்பத்தில் பிறந்தார். சிறுவயதிலிருந்தே சிவபெருமான் மீது ஆழ்ந்த பத்தி கொண்டவராக இருந்தார். தக்க பருவம் அடைந்ததும் நாகப்பட்டினத்தில் வசிக்கும் வணிகர் பரமதத்தனுக்கு மணம் செய்து வைக்கப்பட்டார்.

மகளை நாகைக்கு அனுப்ப மனம் இல்லாத தனதத்தனார், காரைக்காலில் மகளையும் மருமகனையும் தனியாக ஓர் இல்லத்தில் வாழ வைத்தார். பரமதத்தனும் வணிகத் தொழிலை பண்போடும் நேர்மையோடும் நடத்தி வந்தார். இறைவன் மீது கொண்ட புனிதவதியின் பத்தியும் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. எந்நேரமும் சிவனடியார் திருநாமத்தைப் போற்றி வழிபடுவதிலேயே இருந்தார்.

ஒருசமயம் புனிதவதியின் கணவன் பரமதத்தனுக்கு ஒரு வணிகர் இரண்டு மாங்கனிகளைக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்தார். அவற்றைப் பெற்றுக் கொண்ட பரமதத்தன், பணியாளை அழைத்து, அவற்றை தன் இல்லத்தில் கொண்டு கொடுக்கச் சொன்னார். பணியாளும், பரமதத்தன் இல்லம் சென்று மாங்கனிகளை புனிதவதியிடம் சேர்ப்பித்தார். அவற்றைப் பெற்றுக் கொண்ட புனிதவதி, பிற்பகல் உணவுக்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தார்.

அச்சமயம் வீட்டு வாசலில் இருந்து 'சிவாய நம' என்ற குரல் கேட்டது. புனிதவதி வாயிற்பக்கம் விரைந்து சென்று பார்த்தபோது, அங்கு ஒரு சிவனடியார் நிற்பதைக் காண்கிறார். அன்போடு அவரை வரவேற்று, உணவருந்த

அழைத்தார். இலையில் பக்குவமாக உணவைப் பரிமாறி, இரண்டு மாங்கனிகளில் ஒன்றையும் அரிந்து அளித்தார். மிகுந்த பசியுடன் இருந்த அடியாரும், உணவருந்திவிட்டு, புனிதவதியை வாழ்த்திச் சென்றார்.

வீட்டிற்கு வந்த கணவர் மாங்கனிகளை கேட்ட சமயம், புனிதவாதியாரும் இருந்த மாங்கனி ஒன்றை அரிந்து அளித்தார். கணவன் மற்றொன்றையும் கேட்க, அம்மையார் செய்வதறியாது திகைத்துச் சிவபெருமானிடம் வேண்டினார். அவர் கையில் ஒரு மாம்பழம் தோன்றியது. மகிழ்ச்சி அடைந்த அம்மையார் அதனைக் கணவனுக்குப் படைத்தார். அக்கனி அதிக சுவையுடன் இருக்கவே காரணம் கேட்ட கணவனிடம் உண்மையைக் கூறினார். பரமதத்தன் நம்பாது மீண்டும் ஒரு கனியை வரவழைக்கக் கூற, அம்மையார் சிவபெருமானை வணங்க மீண்டும் ஒரு மாங்கனி கிடைத்தது. இதைக் கண்ட பரமதத்தன் அவரைத் தெய்வப்பெண் எனக் கருதி, அவருடன் இல்லற வாழ்வில் இருக்க முடியாது எனக் கருதி, அவரை விட்டு நீங்கி பாண்டிய நாட்டின் மதுரை மாநகர் சென்று மற்றொரு பெண்ணை மணம் முடித்து அங்கேயே வாழ்ந்தார்.

பரமதத்தனுக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது, அந்த குழந்தைக்கு அம்மையாரின் பெயரையே வைத்தார். பரமதத்தன் பாண்டிய நாட்டில் இருக்கும் செய்தி, அம்மையாருடைய உறவினர்களுக்கு, மற்ற வணிகர்கள் மூலம் தெரிய வந்தது. அவர்கள் அம்மையாரை அழைத்துக்கொண்டு பாண்டி நாட்டை நோக்கி புறப்பட்டு போனார்கள். அம்மையார் வந்திருக்கும் செய்தி அறிந்து காண வந்த, பரமதத்தன் அவரைத் தெய்வமாக வணங்கித் தனது இரண்டாவது மனைவியிடம், **“இவர் தெய்வத்தன்மை உடையவர், அதனால்தான் காலில் விழுந்தேன். நீயும் இவரைப் போற்றி வழிபடு”** என்று கூறினான். அதன்பின் ”கணவருக்காகத் தாங்கிய உடல் நீங்கி, இறைவரைப் போற்றுகின்ற பேய்வடிவத்தை அருளவேண்டும்” என்று வேண்டிப் பேயுருவம் பெற்றார்.

அம்மையார் இறைவனைக் காணக் கயிலைக்குத் தலையால் நடந்து சென்றார். உமையம்மையார் வினவ, **“நம்மைப் பேணும் அம்மை காண்”** **எனக் கூறி, “அம்மையே வருக”** என்றழைத்து **“வேண்டுவன கேள்”** என இறைவன் வினவினார். அதற்கு அம்மையார்,

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது அடியின்கீழ் இருக்க என்றார்

- (பெரியபுராணம் - 1781)

என்றார். இறைவனும் தன் திருத்தாண்டவம் காட்டித் திருவாலங்காட்டிற்கு வரச்சொல்லித் தன் திருவடியின் கீழ் என்றும் இருக்க அருளினார்.

இவரருளிய நான்கு பனுவல்கள் பதினோராம் திருமுறையுள் இடம்பெற்றுள்ளன:

1. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் 1 (11 பாடல்கள்)
2. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் 2 (11 பாடல்கள்)
3. திருவிரட்டை மணிமாலை (20 பாடல்கள்)
4. அற்புதத் திருவந்தாதி (101 பாடல்கள்)

இறைவனைப் பதிக முறையில் முதன்முதலில் பாடியமையால் “மூத்த திருப்பதிகங்கள்“ எனப்படுகின்றன. கட்டளைக் கலித்துறை, அந்தாதித் தொடை, சிற்றிலக்கிய வடிவங்கள் ஆகியவற்றிற்கு இவரே வழிகாட்டியாவார். அம்மையாரின் பத்திச் சிறப்பை,

இடர்களையா ரேனும் எமக்குஇரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் - சுடருருவில்
என்பு அறாக் கோலத்து எரியாடும் எம்மனார்க்கு
அன்பு அறாது என்நெஞ்சு அவர்க்கு

- (அற்புதத்திருவந்தாதி -2)

என்ற பாடல் எடுத்துக்காட்டுகின்றது. காரைக்காலில் ஆண்டுதோறும் ஆனித் திங்கள் நிறைமதி நாளில் மாங்கனித் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஆவணி கார்த்திகையில் தோன்றிய, பங்குனி சுவாதியில் முத்தியடைந்த இவர், அறுபத்து மூன்று நாயன்மார்களில் அமர்ந்த கோலம் கொண்ட சிறப்புக்குரியவர்.

திருச்சிற்றம்பலம்

திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்

சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்

(ஆவணி இதழ்த் தொடர்ச்சி)

பவானி சிவ
அ.வேலுச்சாமி

திருநாட்டுச் சிறப்பு:- பாடல் 21

சாலிநீள் வயலின் ஓங்கித் தம்நிகர் இன்றி மிக்கு
வாலிதாம் வெண்மை உண்மைக் கருவினாம் வளத்த ஆகிச்
சூல்முதிர் பயலை கொண்டு சுருள் விரித்து அரனுக்கு அன்பர்
ஆலின் அன்பர் சிந்தை போல அலர்ந்தன கதிர்கள் எல்லாம்.

பொருள்:- சாலி – நெல் நீண்ட வயலிலே ஓங்கி வளர்ந்து தமக்கு ஒப்பில்லாமல் மிகுந்து தூய வெள்ளிய உண்மைக் கருவின் வளத்தை உடையனவாகி சூல் முதிர்வதனால் பசலை அடைந்து, பின்னர்ச் சுருளை விரித்துக்கொண்டு அரனுக்கு அன்பர்களுடைய நீர்மையுடைய மனம் போலவே, கதிர்கள் எல்லாம் அலர்ந்தன.

சிவக்கவிமணி
சி.கே சுப்பிரமணிய முதலியார்

வி-உரை:- இப்பாடல் நெற்பயிர் விளைவிற்கும் அரன் அன்பர் சிந்தைக்கும் முற்றவமையாக அமைந்தமை காண்க. மேல்வரும் திருப்பாட்டும் இவ்வாறே அமைந்தமையும் இவையிரண்டும் தொடர்நிலை உவமமாய்த் தொடர்ந்து வருதலும் காணத்தக்கது.

ஓங்குதல்:- செழித்து வளர்தல், **அன்பர் சிந்தை:-** மேல் ஓங்கி நிற்றல் உயர்ந்த நோக்கமுடையதாதல் பெரியோர் உள்ளம் போல ஓங்குநிலைத் தன்மையராய் என்று பின்னர்க் கூறுதல் காணலாம்.

“அன்பர்க்குச் சொல்லுங்கால் நிகரற்ற சுத்தமாகிய வெள்ளிய உண்மை ஞானத்திற்கு ஏதுவாயுள்ள சிவத்தைப் பெற்றமையால் வந்த வளமுடையதாகிச் சத்தி பதிதலைப் பெற்றுச் சிவோகம் பாவனையினாலே குவிதலன்றி விரிந்த அன்பர்களது மனதைப் போல (சூல்முதிர் பயனை கொண்டு அனைத்து ஆன்மாக்களையும் பெறும் கருப்பங் கொண்ட பசிய நிறத்தையுடைய சத்தி பதிதலைப் பெற்று)” இது தில்லை நடராச ஓதுவார் அவர்கள் பாடம் கேட்ட குறிப்பில் கண்டது என்று சிவக்கவிமணி ஐயா அவர்கள் உரைக்குறிப்பில் கூறியுள்ளார்கள்.

அன்பர் சிந்தை:- அன்பு முதிரமுதிரச் சிவபெருமான் திறத்திலே ஈடுபட்டுத் திருமேனி நிறம் வேறுபடுதல். **சுருள் விரிதல்:-** கருவில் தங்கிச் சுருண்டு பிணைந்திருந்தவை அதினின்றும் வெளிப்பட்டு விரிதல்

“மனமுகிழ்ந்த சுருள் நீக்கி மலர்விரிக்கும் கலை பயிலத் தொடக்குவித்தார்” – திருநாவுக்கரசு நாயனார்புராணம்

"முகைத்த மலரின் வாசம் போல் சிந்தைமலர உடன் மலரும் செல்வி உணர்வு" - சண்டேசுர நாயனார் புராணம்

ஆலின் அன்பர் சிந்தை:- ஆலுதல் – அசைதல், விதிர்ப்புறு சிந்தையர் என்றும் காணலாம் (திருக்கூட்டச் சிறப்பு) அன்பு முதிர்வினைக் காட்டும் மெய்ப்பாடுகளில் ஒன்று.

பாடல்:- 22

பத்தியில் பாலராகிப் பரமனுக்கு ஆளாம் அன்பர்
தத்தமில் கூடினார்கள் தலையினால் வணங்குமா போல்
மொய்த்து நீள் பத்தியின்பால் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி எல்லாம்.

பொருள்:- அன்பில் வசப்பட்டவர்களாகிய இறைவனுக்கு ஆட்செய்யும் அன்பர்கள் கூடியபோது ஒருவருக்கொருவர் தலை வணங்கி இறைஞ்சுவது போல, செறிந்து நீண்ட எதிர் எதிராகக் கூடிய வரிசைகளிலே கதிர்களிற் பால் ஊறி முதிர்ந்த வகையினால் தலை வணங்கியவைகளாய், அந்த அன்பர்களுக்கு சிவபோகம் விளைவது போலவே நெல் முதிர்ந்து போகம் விளைந்தது.

வி-உரை:- மொய்த்து:- கதிர்களில் இடமின்றி மணிகள் செறிந்து நிறைந்து இருத்தல். **அன்பர் தலைவணங்குதல்:-** அரனையும் அடியாரையும் வணங்குதற்காகவே தலையை இறைவன் கொடுத்தாராதலின் தலை வணங்கி என்றார். **"தலையே நீ வணங்காய்", "வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை", "வணங்கத் தலை வைத்து"** என வரும் திருவாக்குகளால் காணலாம். அன்பர்கள் கூடியபோது ஒருவரையொருவர் வணங்கும் வணக்கம் இங்கே குறிக்கப் பெற்றது. இது சைவ நெறிமுறை. தலை தூக்கி நிற்றல் செருக்கையும், தலை தாழ்த்தல் பணிவையும் குறிக்கும்.

வித்தகர்:- வித்தகம் ஞானம் சிவனிடத்தே பதிந்த நிறைந்த அறிவு. **விளைவு:-** சிவயோகமும் – நெற்போகமும் என்க. மேற்பாட்டிலே சாலி கதிர் அலர்ந்தன என்றாற்போல் இப்பாட்டிலேயும் சாலி பயன் முதிர்ந்து வணங்கி விளைந்தன என்று முடித்துக் காட்டினார். விளைவு வித்தகம் ஆணவம் மற்றும் வலிகெட்டு, முழுவதும் ஆளாம் தன்மை இதுவே வணக்கத்தின் முதிர்வு **"வித்தகன் தன்மை ஒன்றும் அறிந்திலை"** – திருவிளையாடல் புராணம்

ஆளாம் அன்பர் வணங்குமாபோல்:- என்றமையால் அவ்வணக்கமே பரமனுக்கு ஆளாக்குவிக்கும் – என்ற சாதன விளக்கமும் பரமனுக்கு ஆளாவார் அரன்போலவே அடியார்களையும் வணங்குவர் என்று அடியார் இலக்கணமும் பெற்றாம். **"நேயம் மலிந்தவர்வேடமும் ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே"** என்பது மெய்ந்நூல்.

அப்பர்சாமிகள் சீர்காழியிலே திருஞான சம்பந்த சுவாமிகளை வணங்கிய காட்சியை சேக்கிழார் பெருமான் அருளிய திருவாக்கும், சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் திருவாரூரிலே அடியார்கள் எதிர்கொண்ட போதும் இவ் வணக்கத்தின் இயல்பு காணலாம்.

"தொண்டர் திருவேடம் நேரே தோன்றியது என்று தொழுதே அண்டரும் போற்ற அணைந்த அங்கு அரசும் எதிர் வந்து இறைஞ்ச" – (திருஞானசம்பந்த நாயனார்புராணம்)

"பணிந்தவர்கள் கரங்கள்பற்றி எழுதரிய மலர்க்கையால் எடுத்திறைஞ்சி" – (திருநாவுக்கரசு நாயனார் புராணம்)

"வந்தெதிர் கொண்டு வணங்குவார் முன் வன்தொண்டர் அஞ்சலிகூப்பி வந்து" – (தடுத்தாட்கொண்ட புராணம்)

இவை நமது சமயக் குரவர்கள் நடத்திக் காட்டிய முறையாம். இதுவே புராணத்தின் உள்ளுறையாகவும் வைத்துப் போற்றப்படுவது. சிவமே காணும் ஆசிரியர் பெருமானது பத்திக் கண்ணுக்கு நெல் விளைவு முழுவதும் சிவ விளைவேயாய்க் காணும் தொடர்நிலை உவமத்தின் அழகு காணத்தக்கதாம்.

திருச்சிற்றம்பலம்

Siva P.Ketharan
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



Karthigai Vilakkeedu: The Festival of Lamps

Every year, when the Tamil month of Karthigai arrives, homes, temples and streets glow with rows of small clay lamps. In Jaffna and across the Tamil community, we call it Karthigai Vilakkeedu. Its message is simple: light pushes back darkness, and the festival asks us to carry that light into our own lives.

The festival falls on the day the full moon lines up with the Karthigai star. It is one of the oldest Tamil festivals we know of. In the 7th century, Thirugnana Sambandar sang of it at the Kapaleeswarar temple in Mylapore:

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச்சரத்தான் தொல்கார்த்திகை நாள்
தளத்தேந்து இளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்

In this verse, he asks Poompavai how she could leave without seeing the Vilakkeedu, when the women of Mylapore light lamps for the Lord on Karthigai day. Even then, Sambandar called it “tol Karthigai”, the ancient Karthigai.

On the same day, the biggest celebration of all takes place at Thiruvannamalai in Tamil Nadu. The Arunachaleeswarar temple there holds a ten-day festival that builds up to Karthigai night. At around 6 pm, the Maha Deepam is lit on top of Arunachala hill. It is a giant flame fed with ghee, and it can be seen from around 35 kilometres away.

Hundreds of thousands of people travel to Thiruvannamalai for it. Many climb the hill to pour their own offering of ghee into the cauldron, and many more walk the 14-kilometre path around the hill, known as Girivalam. For Tamils who cannot make the trip, the moment is streamed live around the world, and lighting lamps at home at the same hour is a way of being part of it.

At home, Vilakkeedu is simple and warm. Families clean the house, draw kolams at the doorway and place agal vilakkus (clay oil lamps) along steps, windows and walls. In many Jaffna homes, lamps are also set out in the garden and at the gate, so the whole compound shines. Sweets are shared with family and neighbours. Nothing about it needs to be grand. A single lamp lit with care is enough.

For Tamils in the diaspora, including here in Sydney, the festival carries extra weight. It is often our children’s first real link to a tradition their grandparents grew up with. Lighting a lamp together teaches what words alone cannot: that culture survives when it is practised, not just remembered.

Karthigai Vilakkeedu reminds us that light is meant to be shared. One lamp can light a hundred others without losing its own flame. This Karthigai, let us light our homes, and let that light reach the people around us.

Saiva Saint Karaikkal Ammayar - The determined

Srisankarshan Srisatkunarajah
English Editor
Thennadu

Karaikkal Ammaiyar, born Punithavathi, is counted as twenty-third of the sixty-three Nayanmars. She belongs to the hymn-composing saints of the Saiva tradition, although her life in the Periya Puranam is distinguished as much by her renunciation of worldly identity as by her devotional poetry. Born into a prosperous merchant household, she fulfilled the customary obligations of married life while maintaining an exceptional devotion to Sivaperuman and his devotees. Her account follows the gradual separation of her religious life from the social expectations placed upon her, culminating in her assumption of an unconventional physical form and her association with Sivaperuman's divine dance at Tiruvalankadu.

Background

Punithavathi was born in Karaikkal, a coastal trading town, to Dhanadattan, a prominent merchant. Raised in a household devoted to Sivaperuman, she acquired her religious habits from childhood, constructing small temples in play and regularly invoking the Lord's name. Upon reaching marriageable age, she was married to Paramadattan, a wealthy merchant, and entered a household in which her religious observances continued alongside her domestic responsibilities.

Hospitality towards Sivanadiyargal occupied an important place in her married life. The Periya Puranam presents this practice not simply as a matter of generosity, but as an expression of the Saiva understanding that service rendered to the devotees of Sivaperuman constitutes service to the Lord himself. This principle would acquire particular importance in Punithavathi's life, since an ordinary act of hospitality became the occasion through which her spiritual standing was first recognised beyond the household.

The miracle and mangoes

The defining episode of Punithavathi's married life began when one merchants presented Paramadattan with a pair of mangoes, which he subsequently sent home for his midday meal. During his absence, a devotee of Sivaperuman arrived seeking sustenance. Punithavathi received him with the customary hospitality afforded to Sivanadiyargal and served him a meal, including

one of the mangoes her husband had entrusted to her. When Paramadattan returned, he was served the remaining fruit and, having found it exceptionally sweet, requested the second. Punithavathi, having already offered it to the visiting devotee, turned to Sivaperuman in prayer and received another mango through divine grace. Its extraordinary sweetness prompted Paramadattan to question its origin, whereupon she explained the circumstances without concealing her earlier act of hospitality. Unconvinced, he demanded further proof, and another mango appeared in her hands in answer to prayer. Upon receiving it, however, the fruit vanished, leaving him fearful of the supernatural power manifested through his wife.

The incident is significant within the songs of the Periya Puranam. Punithavathi's first consideration had been the welfare of a Sivanadiyar, notwithstanding the prior domestic purpose for which the fruit had been reserved. Her hospitality was neither conditional upon abundance nor undertaken in expectation of a miracle.

Her husband's departure

Paramadattan's response to the miracle altered the nature of their marriage. Convinced that Punithavathi possessed a sanctity beyond ordinary human understanding, he could no longer regard her solely within the customary relationship of husband and wife. His recognition of her spiritual standing was accompanied by apprehension, and he eventually withdrew from the household, settling in the Pandya country, where he married another woman and had a daughter whom he named Punithavathi.

When her relatives discovered his circumstances, efforts were made to restore the marriage. Paramadattan nevertheless refused, and upon encountering his former wife in the presence of

his new family, he prostrated himself before her in acknowledgement of the divine qualities he believed her to possess.

The episode presents an unusual consequence of recognised sanctity within domestic life. Although Paramadattan regarded his wife with reverence, that reverence displaced the familiarity and mutual obligations upon which their marriage had rested. Punithavathi's subsequent renunciation must therefore be understood in relation to this change in her circumstances, rather than as a rejection of domestic life from its beginning.

Her renunciation and journey to greater places

Having recognised that her husband no longer regarded her as a wife, Punithavathi prayed to Sivaperuman to be released from the youthful beauty and physical appearance by which she had previously been known. Her request was granted, and she assumed a form described as demonic or aged, relinquishing the bodily qualities conventionally associated with feminine beauty.

The transformation carries particular significance in her account. Physical beauty, previously an attribute of her position within society, had ceased to serve the religious life she wished to pursue. By voluntarily abandoning it, Punithavathi removed the expectations attached to her former identity and sought a condition in which her devotion could proceed without worldly interference. The renunciation of outward beauty is thus accompanied by the increasing importance of her devotional hymns, through which her religious experience found expression.

Her journey to Kailash provides a further instance of this relationship between the body and devotion. Rather than approaching the sacred mountain in the ordinary manner, she ascended upon her head, with her feet raised, an extraordinary expression of reverence in the presence of Sivaperuman. Upon receiving her, the Lord addressed her as Ammai, meaning Mother, from which she acquired the name Karaikkal Ammaiyar.

The designation is especially significant given the nature of her renunciation. Having relinquished the social identity associated with her former appearance and marriage, she received from Sivaperuman an address of maternal honour. Her standing was consequently established not through birth, wealth or domestic position, but through the devotion for which she had surrendered those distinctions.

Her devotion to Sivaperuman's dance

Upon receiving Sivaperuman's grace, Ammaiyar sought liberation from the cycle of rebirth. Her prayer also contained a further qualification: should another birth occur, she wished never to lose remembrance of the Lord. Beyond liberation itself, she desired the privilege of remaining at his feet and singing while he performed his divine dance.

This request is important for understanding the character of her devotion. Ammaiyar did not seek spiritual release merely as an end to worldly existence, but expressed a continuing desire for the presence and worship of Sivaperuman. Her wish to accompany his dance through song establishes a direct relationship between her spiritual aspirations and the hymns for which she is remembered.

At Tiruvalankadu, her devotion found its fulfilment in the divine dance of Sivaperuman, with Ammaiyar granted the privilege of singing in his presence. The association of her hymns with the Lord's dance gives her religious life a particular character within the Nayanmar tradition, joining personal renunciation with a continuing participation in divine worship.

Rememberence

Karaikkal Ammaiyar is remembered both as a poet-saint and as a devotee whose renunciation extended to the abandonment of her former physical appearance. Her life is distinctive among the sixty-three because the withdrawal from conventional domestic identity did not signify a withdrawal from religious activity, but permitted her devotion to assume a different and enduring form.

Her hospitality towards Sivanadiyargal, the circumstances of her husband's departure and her eventual transformation are closely related within the Periya Puranam. The same devotion that governed her treatment of a visiting devotee subsequently determined her response to the dissolution of her marriage and her desire to remain in the presence of Sivaperuman. Her abandonment of physical beauty also gives particular meaning to the survival of her hymns, in which the inward qualities of devotion take precedence over the outward attributes she had relinquished.

The name Ammaiyar, bestowed upon her by Sivaperuman himself, remains central to her remembrance. It recognises a devotee who had voluntarily relinquished the ordinary distinctions of worldly life, yet whose relationship with the Lord was expressed through the intimate language of motherhood, song and the desire to remain at his feet during the divine dance. Her hymns recite year on year on the Panguni Suvathi day.

ICBT உயர்கல்வி நிறுவனத்தில் ஒன்பானிரவு வழிபாடுகள் (20-10-2026)

இராசராச சோழன் சதய விழா வழிபாடுகள் (22-10-2026)

புரட்டாசி பேரொடுக்க மறைமதி (மாலயம்) சிறப்பு வழிபாடுகள் (10-10-2026)

ஒன்பானிரவு (நவராத்திரி) பத்தாம் நாள் சிறப்புப் பூசை வழிபாடுகள் (20-10-2026)

புரட்டாசித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (26-09-2026)